Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
THURSDAY, JANUARY 13, 2022

வியாழக்கிழமை ஜனவரி 13, 2022 | ஒளி: 07 கதிர்: 204 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | விலை ரூ.10



பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு

# 5,000 ரூபாயை வழங்க கம்பனிகள் மறுப்பு

■ டி.ஷங்கீதன்

பெருந்தோட்டங்களில் தற்போது நிலவுகின்ற முறைமையில் மாற்றம் வராத வரை, பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான 5,000 ரூபாயை

தொடர்ச்சி P2

# சிங்கள வாக்குமூலத்தில் கையெழுத்திட மறுத்தார் மனோ



விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு நேற்று (12) காலை சென்ற தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், தனது சாட்சிய வாக்குமூலம், தமிழ் மொழியில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று திட்டவட்டமாக ஆணைக்குழு விசாரணையாளர்களுக்கு அறிவித்ததால், விசாரணை இடை நடுவில் நிறுத்தப்பட்டு, பிறிதோர் உசிதமான தினத்தில் நடத்த முடிவாகியது.

"கடந்த அரசாங்கத்துக்கு முந்தைய அரசாங்கத்தின் அமைச்சர்களின் மீது, எப்படி ஊழல் குற்றச்சாட்டு விசாரணைகளை முன்னெடுத்தீர்கள்" என்று விசாரிக்கும் விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு மனோ எம்பி அழைக்கப்பட்டார்.

கடந்த வருட இறுதியில், மனோ எம்பியின் வசிப்பிட வலய பொலிஸ் நிலையம் மூலமாக அவருக்கு சிங்கள மொழியில் அழைப்பாணை அனுப்பட்ட போது, தமிழில் அனுப்பும்படி அந்த அழைப்பாணையை அவர் திருப்பி அனுப்பி இருந்தார்.

தற்போது தமிழ் மொழிபெயர்ப்புடன் அழைப்பாணை அனுப்ப பட்டபோது, அதை ஏற்றுக்கொண்டு விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு நேற்றுக் காலை சென்ற போது மீண்டும்

தொடர்ச்சி P2

டொலர் நெருக்கடிக்கு மத்தியில்

## விமான கொள்வனவு இல்லை

■ ஜே.ஏ.ஜோர்ஜ்

இலங்கையில் தற்போது காணப்படும் டொலர் நெருக்கடிக்கு மத்தியில் தற்போது இலங்கை விமானப்படைக்கு விமானங்களை கொள்வனவு செய்யும் நோக்கம் எதுவும் இல்லை என, இலங்கை விமானப்படையின் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரண தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்: அடுத்த அமர்வுக்கு முன்னர்

## அதிகுற்றப்பத்திரத்தின் தமிழாக்கம் வழங்கப்படும்

### 9 பிரதிவாதிகளுக்கு தமிழ் பேசும் சட்டத்தரணிகள் பெயரீடு

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று, கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தொடர் குண்டுவெடிப்பு தாக்குதலுக்கு உதவிய குற்றச்சாட்டில் 25 பிரதிவாதிகளுக்கு எதிராகத் தாக்கல்

தொடர்ச்சி P2

இவ்வாண்டு

# மாகாண சபை தேர்தல்

■ வா.கிருஸ்ணா

மாகாண சபைத் தேர்தல் இந்த ஆண்டு நடைபெறும் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துரைத்த அவர், "உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டமையானது, நாட்டில் தற்போதைய பொருளாதார சூழ்நிலையை



கொண்டு எடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில் இந்த முடிவை அவர் எடுத்துள்ளார்.

"ஆனால், தேர்தலுக்கு அச்சப்பட்டு அவர் இந்த முடிவை எடுக்கவில்லை. கொரோனா அச்சுறுத்தலுக்கு பின்னர், மக்களின் நிலையைக்கொண்டே இந்த நிலைப்பாட்டை அரசாங்கம் எடுத்துள்ளது. இந்த நிலைமை சுமூகமானதும் நிச்சயமாக விரைவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறும்.

"எனினும், மாகாண சபைத் தேர்தல் வருடக்கணக்கில் பிற்போடப்படும் என்று எந்த அறிவிப்பும் செய்யப்படவில்லை. எனவே, இந்த வருட நடுப் பகுதியில் அல்லது இறுதிப் பகுதியில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என்று நான் கருதுகின்றேன்" என்றார்.

கடன் மறுசீரமைப்புக்காக

## சீனாவிடம் புதிய கடன் பெற முஸ்தீபு

### மத்திய வங்கி ஆளுநர் அறிவிப்பு



நாட்டின் கடன் மறுசீரமைப்பு நோக்கங்களுக்கான தேவை ஏற்படும் பட்சத்தில், சீனாவிடமிருந்து புதிய கடனைக் கோரியுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (12) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சேதன உரத்தால் எனது அரசியல் வாழ்க்கை நாசம்



"சேதன விவசாய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தச் சென்றதன் மூலம் எனது 32 வருட அரசியல் வாழ்வு நாசமாகி உள்ளது" என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

தேசிய விவசாயிகள் அமைப்புகளுடன் விவசாய அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே மேற்கண்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## வடக்கில் கந்தனிடம்

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ, வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு நேற்று (12) சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். அவருக்கு நேற்று 55 வயதாகும். (படம்: எம். றொசாந்த்)



## கிழக்கு முனையத்தில்

கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் நேற்று (12) ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதில், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவும் பங்கேற்றிருந்தார்.

சேறு பூசுவது அரசியலில் சகஜம்

## மைத்திரி தெரிவிப்பு; எப்பொழுதும் தொடரும் என்கிறார்

அரசியலில் சேறு பூசுவது எப்போதும் சகஜம் என்று தெரிவித்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, அரசியல்வாதிகள் அதை எப்பொழுதும் செய்து வந்தனர் என்றும் தொடர்ந்தும் செய்வார்கள் என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

எரிவாயு ஒழுங்குமுறைக்கான

## சிறப்பு வர்த்தமானி



திரவ பெற்றோலியம் எரிவாயு இறக்குமதி மற்றும் விநியோகம் தொடர்பான நியமங்களை வகுத்து ஒழுங்குபடுத்துவதற்கு இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத்துக்கு அங்கிகாரம் வழங்கும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

இன்னுமோர் அபாயம் டெங்கு:

## பொத்துவிலுக்கு சிவப்பு எச்சரிக்கை



■ எம்.எஸ்.எம்.ஹனீபா, வா.கிருஸ்ணா

பொத்துவில் பிரதேசத்தில் 12 நாள்களுக்குள் 54 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டு உள்ளதையடுத்து,

தொடர்ச்சி P2

## ரஞ்சனுக்காக விரைவில் வீதிக்கு இறங்குவோம்

ஒரு வார்த்தை தவறியமையால், ரஞ்சன் சிறைக்குச் சென்று 365 நாள்கள் கடந்துள்ளன எனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்ணான்டோ, இந்தக் குறுகிய காலத்துக்குள் 76 பேருக்கு அதிகமானவர்களுக்கு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை வழங்கப்பட்டுள்ளது என்றார்.

வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும், ரஞ்சன் ராமநாயக்கவை நேற்று (12) பார்வையிடச் சென்ற போதே, ஊடகங்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

கொக்கட்டிச்சோலை பொலிஸ் கடத்திக் கொலை:

## தடுத்துவைக்கப்பட்டிருந்த மூவருக்கு பிணை

■ வா.கிருஸ்ணா

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலையில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை கடத்திக் கொலைசெய்த குற்றச்சாட்டின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த மூவருக்கு, மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் நேற்று (12) பிணை வழங்கியது.

தொடர்ச்சி P2

## குப்பி விளக்கு வரிசை வருகிறது

தற்போதைய அரசாங்கம், எமது நாட்டை பிரகாசமான ஒளி நாடாக மாற்றாமல் இருள் நிறைந்த நாடாக மாற்றியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் சுவாசம் வேலைத்திட்டத்தின் கீழ் பருத்தித்துறை வைத்தியசாலைக்கு வைத்திய உபகரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (11) இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

யாழ்.பல்கலை விஞ்ஞான பீடத்தில்

## மோதல் தொடர்கிறது

### மேலும் இருவர் காயம்; ஒருவர் கைது

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் விஞ்ஞான பீட மாணவர்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் இருவர் காயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திருநெல்வேலி பகுதியில் உள்ள வீடொன்றில் வாடகைக்கு தங்கி இருந்து கல்வி கற்று வரும் விஞ்ஞான பீடம் மூன்றாம் வருடத்தை சேர்ந்த மாணவர்களின் வீட்டுக்குள் புகுந்த நான்காம் வருட மாணவர்

தொடர்ச்சி P2

# சிங்கள வாக்குமூலத்தில்...

ஒரு சட்டசிக்கலை அவர் சுட்டிக்காட்டி கையெழுத்திட மறுத்துள்ளார்.

இது பற்றி மனோ கணேசன் எம்பி ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தியதாவது,

நாட்டின் மொழிச்சட்டம், மொழிக்கொள்கை ஆகியவற்றுக்கும்பொறுப்பு கூறும் அமைச்சரவை அமைச்சராக நான் இருந்தேன். என்னிடமே மொழிச்சட்ட மீறலா?

இலங்கை அரசியலமைப்பில் 4ஆம் அத்தியாயத்தின் 22 ஆம் பிரிவில், ஒவ்வொரு பிரஜைக்கும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய ஏதாவது ஒரு தேசிய மொழிகளில் தாம் விரும்பியவாறு வாய்மொழி மூலமாகவும், எழுத்து மூலமாகவும் பதில்களை பெற உரிமை இருக்கிறது.

நான், இன்று விசாரனைகளுக்கு சென்ற போது, பாராளுமன்ற வாய்மொழி உரைபெயர்ப்பாளரை அங்கே அழைத்து வைத்திருந்தார்கள்.

சிங்கள அழைப்பாணையை நான் திருப்பி அனுப்பி இருந்தமையால் அதை செய்து இருந்தார்கள். அவர் எனக்கும், விசாரணையாளர்களுக்கும் இடையில் உரை பெயர்ப்பு செய்தார். எனது வாக்குமூலம் சிங்கள மொழியில் தட்டச்சு செய்யப்பட்டது.

ஆனால், விசாரணையின் இடையில், “எனது வாக்குமூலத்தில் நான் கையெழுத்திட வேண்டுமா?” எனக்கேட்டேன். “ஆம்” என்றார்கள். “அப்படியானால், தமிழில் ஆவணத்தை தயார் செய்யுங்கள்” என்றேன். அந்த இடத்தில் தமிழில் கணிப்பொறி தட்டச்சு செய்ய அலுவலர் அங்கே இல்லை என்பதால், விசாரணையை இடை நிறுத்துவிட்டு வெளியேறினேன்.

“குற்றவியல் கோவையின் படி, சிங்களத்தில் ஆவணம் தயார் செய்ய முடியும், அதை உரைபெயர்ப்பாளர் எனக்கு எடுத்து சொன்னால் போதும்” என எனக்கு விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் வகுப்பு எடுக்க முற்பட்டார்.

அவரிடம் குற்றவியல் சட்டம் உட்பட எந்தவொரு சட்டமும், நாட்டின் அரசியலமைப்புக்குக் கீழேயே கணிக்கப்பட வேண்டும். உரைபெயர்ப்பு வேறு, மொழிபெயர்ப்பு வேறு. இரண்டையும் எனது தாய்மொழியில் பெற எனக்கு நாட்டின் அரசமைப்பின் 4ஆம் அத்தியாயம் 22 ஆம் பிரிவின்படி உரிமை உள்ளது என்றும் நான் கூறியவுடன் விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அமைதியானது.

மேலும் இந்த விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவே, இதை நியமித்தவரை போன்று நகைச்சுவையாக இருக்கிறது. உலகில் எங்கும் ஊழல் திருட்டைதான் விசாரிப்பார்கள். அதில் ஒரு தர்க்க நியாயம் உண்டு. இங்கே “ஊழல் திருட்டை ஏன் எப்படி விசாரித்தீர்கள்” என கேட்டு இவர்கள் விசாரிக்கிறார்கள். இது இந்நாட்டிற்கே சிறுமை.

கடந்த அரசுக்கு முந்தைய அரசின் அமைச்சர்களின் ஊழல் குற்றச்சாட்டு விசாரணைகளை இந்த நாட்டு பொலிஸ் திணைக்களம்தான் முன்னெடுத்து, வழக்குகளை இந்த நாட்டின் சட்டமாதிப ர்தான் தொடர்ந்தார்.

இன்று இதுபோன்ற இன்னொரு விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை நியமித்து, அவற்றை அரசியல் பழிவாங்கல் என சொல்லி, அதே சட்டமாதிபருக்கு வழக்குகளை வாபஸ் வாங்க அறிவுறுத்தல் விடுக்கப்பட்டு, அதன் வழக்குகள் வாபஸ் வாங்கப்பட்டு, குற்றசாட்டபட்டவர்கள் வெளியே வந்து விட்டார்கள் என்று தெரிவித்தார்.

# விமான...

இலங்கை விமானப்படை தலைமையகத்தில் நேற்று (12) முற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

நாட்டின் தற்போதைய நிலைமையை உணர்ந்துள்ள விமானப்படை, நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு தேவையான வகையில் முன்னாயத்தங்களுடனே திட்டமிடப்பட்ட விமான ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

டொலர் நெருக்கடிக்கு மத்தியில் அதிகளவு விமான ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதனால், விமான பராமரிப்பு மற்றும் உதிரிபாக கொள்வனவுக்கு அதிக டொலர் செலவழிக்கப்படுகின்றதா? என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

நாட்டின் தேசியப் பாதுகாப்பு மற்றும் இலங்கையின் கடல் எல்லை, கடல் வளங்களை பாதுகாப்பதற்கு அவசியமான விமான ரோந்து நடவடிக்கைகளை மாத்திரமே முன்னெடுப்பதாகவும், விமான பராமரிப்பு உள்ளிட்ட பல பணிகள் விமானப்படை வீரர்களை கொண்டு முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். இதற்காக கட்டுநாயக்கவில் விசேட பராமரிப்பு நிலையமொன்று உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், டொலர் நெருக்கடி உள்ளிட்ட விடயங்களை கருத்தில் கொண்டு விமான ரோந்து நடவடிக்கையை நிறுத்திவைத்தால், இப்போதைய செலவீனத்தை விட, சில காலங்களின் பின்னர் அந்த விமானங்களை பறக்க செய்யும் வகையில் தயார்ப்படுத்த அதிகளவு நிதி தேவைப்படும் என்றும் அவர் கூறினார்.

அரசாங்கத்தால் விமானப்படைக்கு ஒதுக்கப்பட்ட நிதி, மிகவும் முக்கிய தேவைகளுக்காக, திட்டமிடப்பட்டு செலவழிக்கப்படுவதாக கூறிய விமானப்படை தளபதி, இலங்கை விமானப்படைக்கு தேவையான விமானங்களை உடனடியாக கொள்வனவு செய்யும் நோக்கம் இல்லை என்றார்.

ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளித்த அவர், விமான கொள்வனவுகள் 5 வருடம் 10 வருடங்கள் என, நீண்ட கால திட்டமிடல்களின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்படுவதாகவும் கூறினார். 6 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம்

அதேவேளை, இலங்கை விமானப்படைக்கு சொந்தமான விமானங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் சமாதான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் நிலையில் அதன் ஊடாக கணிசமான வருமானம் நாட்டுக்கு பெற்றுக்கொடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

# மைத்திரி தெரிவிப்பு:...

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க முன்வைத்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் நேற்று (12) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அரசியலில் சேறு பூசுவது எப்போதும் சகஜம் எனவும் இது எப்பொழுதும் அப்படித்தான் தொடரும் என்றும் தெரிவித்த அவர், எல்லா அரசியல்வாதிகளும் இப்போது இதற்குப் பழகிவிட்டனர் என்றார்.

ரவி கருணாநாயக்க என்ன சொன்னார் என்று தனக்குத் தெரியவில்லை என்று தெரிவித்த அவர், கடந்த இரவு வரை இரத்தினபுரியில் தான் கடினமாக உழைத்ததாகவும் அவருடைய குற்றச்சாட்டுகளையும் சரிபார்க்க வேண்டும், என்றும் குறிப்பிட்டார்.

என்னைப் பற்றி அவரிடம் இருக்கும் ஒரே விவரம் எனது பிறந்த திகதி, நான் பிறந்த இடம் எனது முழுப் பெயர் மற்றும் எனது முகவரி. அரசியல் எல்லாம் ஒரு விளையாட்டு, இவையெல்லாம் பிரச்சனைகள் அல்ல. நான் கவலைப்படவில்லை, என்றும் குறிப்பிட்டார்.

பல தடைகள் வந்தாலும் அரசியல் பயணத்தைத் தொடர்வேன் என்றும், மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள், என்ன சொல்கிறார்கள் என்பதைப் பற்றி கவலைப்படப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

# தடுத்துவைக்கப்பட்டிருந்த...

2008ஆம் ஆண்டு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த கிரான்குளத்தைச் சேர்ந்த நாகராசா பிரசாந்தன் என்ற பொலிஸ் உத்தியோகத்தர், சிலரால் கடத்திக் கொல்லப்பட்டு, முனைக்காடு மையானத்தில் புதைக்கப்பட்டதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் விசாரணையில் 2019ஆம் ஆண்டு தெரியவந்தது.

இவ்விடயம் தொடர்பாக குற்றப்புலனாய்வுத்து றையினர் விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில், பொலிஸ் உத்தியோகத்தரை கடத்தி கொலை செய்த குற்றச்சாட்டில் முன்னாள் ஆயுதக் குழுவின் உறுப்பினர்களான, “மகிழன்” என்றழைக்கப்படும் மேரி அன்ரனி போல் அஜதீபன், “மதன்” என்றழைக்கப்படும் தம்பிமுத்து செல்வராசா, “லிங்கன்” என்றழைக்கப்படும் சந்திரன் சுப்பிரமணியம் ஆகிய மூவரை, ஓட்டமாவடி, களுவாஞ்சிக்குடி மற்றும் கல்லடி ஆகிய இடங்களில் வைத்து 2019ஆம்ஆண்டு மார்ச் மாதம் கைது செய்திருந்தனர்.

இதனடிப்படையில், இவர்கள் குறித்தான வழக்கு, மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றுவந்த நிலையில், சந்தேகநபர்கள் சார்பில் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதன்கீழ், சட்டமா அதிபர் திணைக்களத்தால் குறித்த வழக்கை பயங்கரவாத தடைச்சட்டத்தில் இருந்து நீக்குவதுடன், குறித்த வழக்கை சாதார தண்டனைச் சட்ட கோவையின் கீழ் விசாரணைகளை முன்னெடுப்பதாக உயர்நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் சந்தேக நபர்கள் சார்பில் மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் பிணை தாக்கல்செய்யப்பட்டு, அது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வந்தனர்.

இந்நிலையில், குறித்த பிணை மனுவானது நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், தடுத்துவைக்கப்பட்டுள்ள மூவரையும் 10 இலட்சம் ரூபாய் காசுப் பிணையிலும் 5 இலட்சம் ரூபாய் சரீரப் பிணையிலும் செல்ல மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி எம்.என்.அப்துல்லா அனுமதியளித்துள்ளார்.

# அதிகுற்றப்பத்திரத்தின்...

செய்யப்பட்டுள்ள வழக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி வரை ஒத்திவைக்க, கொழும்பு விசேட மேல் நீதிமன்ற தீர்ப்பாயம், நேற்று (12) தீர்மானித்தது.

இந்த வழக்கு, தமித் தோட்டவத்த, அமல் ரணராஜா மற்றும் நவரத்ன மாரசிங்க ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள நௌபர் மௌலவி உட்பட குற்றம் சாட்டப்பட்ட ஒன்பது பேருக்காக சட்டத்தரணிகள் இதற்கு முன்னர் ஆஜராகியிருக்கவில்லை.

தமிழ் பேசும் சட்டத்தரணிகளை அரச செலவில் நியமிக்குமாறு குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கடந்த அமர்வின் போது, நீதிமன்றில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதன்படி, குற்றம் சாட்டப்பட்ட ஒன்பது பேருக்கான வழக்கு நேற்று (12) எடுத்துக்கொள்ளப்பட்ட போது, தமிழ் பேசும் சட்டத்தரணிகள் அரச செலவில் பெயரிடப்பட்டனர்.

அதி குற்றப்பத்திரிகையின் தமிழாக்கத்தை தமக்கு வழங்குமாறு பிரதிவாதிகள் முன்னதாக நீதிமன்றத்தில் கோரியிருந்தனர்.

தமிழ் மொழிபெயர்ப்புகள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், அடுத்தஅமர்வுக்கு முன்னதாக வழங்கப்படும் என்றும் முறைப்பாட்டாளர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஹரிபிரியா ஜயசுந்தர, மன்றில் தெரிவித்தார்.

இந்த வழக்கில் பிரதிவாதிகள் சிலர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், தமது கட்சிக்காரர்கள் புனித குர்ஆன் பிரதியை வைத்திருப்பதற்கு இடையூறு விளைவித்த சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்குமாறு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

அப்போது, சிறைச்சாலைச் சட்டத்தின் விதிகள் ஏதேனும் இருந்தால் அவற்றை எளிதாக்க நடவடிக்கை எடுக்குமாறு நீதிபதிகள் குழாம், சிறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது.

நௌபர் மௌலவி, சஜித் மௌலவி, மொஹமட் மில்ஹான், சாதிக் அப்துல்லா, ஆதம் லெப்பை, மொஹமட் சனாஸ்தீன் மற்றும் மொஹமட் ரிஸ்வான் உட்பட 25 பிரதிவாதிகளுக்கு எதிராக 23,270 குற்றச்சாட்டுகள் முன்னர் தாக்கல் செய்யப்பட்டன.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளில் கொலைக்கு சதி செய்தல், உதவி செய்தல், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை சேகரித்தல் மற்றும் கொலை முயற்சி ஆகியவை அடங்குகின்றன.

# குப்பி விளக்கு...

அதில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது,

மோசமான நிர்வாகம் மற்றும் மோசமான பொருளாதார நிர்வாகத்தால் நாட்டில் இன்று வரிசை யுகம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் மெழுகு வர்த்திகள் மற்றும் குப்பி விளக்குகளுக்கான வரிசை உருவாகும் என்றும் குறிப்பிட்டார்.

அரசாங்கம் மக்கள் மத்தியில் செல்ல அஞ்சுகிறது என தெரிவித்த அவர், உள்ளூராட்சி மன்ற தேர்தலை ஒருவருடத்துக்கு தள்ளிப்போடுவது அதை நிரூபித்துள்ளது என்றும் சரியான ஆட்சி நடந்தால் ஆட்சியாளர்கள் மக்கள் மத்தியில் செல்ல பயப்படக்கூடாது என்றும் சுட்டிக்காட்டினார்.

ஒரு நாடாக நாம் இந்த முறையில் முன்னேற முடியாது என்றும் மக்கள் சார்பாக நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் மாற்றம் நிகழ வேண்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி இந்த நாட்டின் பிரச்சினைகளுக்கு புதிய தீர்வுகளை வழங்குவதன் மூலம் இந்த நாட்டை கட்டியெழுப்புவோம் என்று உறுதியளித்தார்.

பாரம்பரியம் புறக்கணிக்கப்பட்டு செயலில் நிரூபிக்கப்பட்டுள்ளது. நாட்டைக் கட்டியெழுப்பவும், அபிவிருத்தி செய்யவும், பொறுப்பேற்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றார்.

# ரஞ்சனுக்காக...

தொடர்ந்து தெரிவித்த அவர்,

திருடாமல், கொள்ளையிடாமல், கொலைச் செய்யாமல், போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடாமல் நேர்மையாக உண்மையை பேசிய அவர் சிறைக்குச் சென்று ஒரு வருடம் ஆகின்றது. எனவே, ரஞ்சனுக்காக கட்சி, நிறம், பேதமின்றி நாம் அனைவரும் வீதிக்கு ஒன்றாக இறங்குவது அவசியம்.

நாம் இங்கே, மரிக்கார் மற்றும் எமது எதிர்கட்சியின் தலைவர் ஆகியோரது பிறந்தநாளை கொண்டாடும் தருவாயில் உள்ளே ரஞ்சன் மலசலக் கூடங்களை கழுவிக்கொண்டிருப்பதை நினைத்து வேதனை அடைகிறோம் என்றார்.

# சிறப்பு...

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளரால் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படி, அனைத்து எரிவாயு இறக்குமதிகள், எரிவாயு சிலிண்டர்கள், ரெகுலேட்டர்கள் மற்றும் வால்வுகளுக்கான இறக்குமதி மற்றும் விநியோகத் தரங்களை அமைக்கவும் ஒழுங்குபடுத்தவும் இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# 5,000 ரூபாயை ...

பெற்றுக் கொடுக்க முடியாது என பெருந்தோட்ட கம்பனிகளின் முக்கியஸ்தர்கள் தெரிவிப்பதாக தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கும் 5,000 ரூபாயை பெற்றுக் கொடுக்கும் முகமாக தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் தொழில் அமைச்சில் நேற்று முன்தினம் (11) கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் பெருந்தோட்ட கம்பனிகளின் அதிகாரிகள் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போது,

கடந்த காலங்களில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1,000 ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்கியதன் காரணமாக கம்பனிகளுக்கு உற்பத்தி செலவானது பாரிய அளவில் அதிகரித்துள்ளது.

அதே போல உலக சந்தையில் தற்பொழுது தேயிலையின் விலை அதிகரித்திருந்தாலும் அதன் பலனை பெருந்தோட்ட கம்பனிகளுக்கு பெற்றுக் கொள்ள முடிவதில்லை. அதனை இடைத்தரகர்களே பெற்றுக் கொள்கின்றனர். எனவே இவ்வாறான ஒரு நிலையில் பாரிய தொகையை வழங்குவது என்பது முடியாது காரியமே என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்பொழுது நாட்டில் இரசாயன உரத்திற்கான தட்டுப்பாடு நிலவுவதால் தேயிலை உற்பத்தியிலும் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என சேவைகள் வழங்கும் சங்கத்தின் பணிப்பாளர் நாயகம் மங்கள யாபா குறிப்பிட்டார்.

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாகவும் பெருந்தோட்டங்களில் விலைச்சலில் ஏற்பட்டுள்ள பின்னடைவு காரணமாகவும் இந்தளவு பாரிய ஒரு தொகையை எந்த காரணம் கொண்டும் பெருந்தோட்ட கம்பனிகளால் செலுத்த முடியாது நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் மங்கள யாபா மேலும் தெரிவித்துள்ளார்.

# சீனாவிடம் புதிய கடன்...

அங்கு மேலும் தெரிவித்த அவர், இலங்கைக்கும் சீனாவுக்கும் நல்ல பரஸ்பர புரிந்துணர்வு உள்ளது. மறுசீரமைப்பு நோக்கங்களுக்காக நாங்கள் சீனாவிடம் கடன் கோரியுள்ளோம். சீனா எமக்கு வழங்கும் உதவிகளை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி மற்றும் பிற நோக்கங்களுக்காக நாம் இந்தக் கடனைப் பெறலாம் என்றும் நாங்கள் ஏற்கெனவே சீனா மற்றும் இந்தியாவுடனும் பெரிய அளவில் வர்த்தகம் செய்து வருகிறோம் என்றும் கப்ரால் கூறினார்.

தற்போது, 1 பில்லியன் டொலர் நிவாரணம் பெற இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயங்கள் நடக்கும் போது, எங்களிடையே பகிர்ந்து கொள்ளப்படும் வர்த்தகப் பிணைப்புகள் அதிகரிக்கும். மேலும், இந்த நாடுகளுக்கிடையிலான உற்பத்தித்திறன் மற்றும் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த முடியும் என்று தெரிவித்தார்.

மேலும், சீனாவால் விவாதிக்கப்பட்டு வழங்கப்படும் தொகை இன்னும் இறுதி செய்யப்படவில்லை என்றும், உரிய நேரத்தில் அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் ஆளுநர் கப்ரால் குறிப்பிட்டார்.

# சேதன உரத்தால்...

பெரும்போக இயற்கை விவசாய வேலைத்திட்டம் தொடர்பில் விவசாயிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் நியாயமற்றவையெனவும் விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சேதன பயிர்ச்செய்கை திட்டத்தை நாட்டுக்கும் மக்களுக்கும் மிக முக்கியமான வேலைத்திட்டமாக மாற்றுவதற்கு ஜனாதிபதியுடனும் அரசாங்கத்துடனும் அர்ப்பணிப்புடன் இருப்பதாக அமைச்சர் அளுத்கமகே குறிப்பிட்டார்.

# பொத்துவிலுக்கு...

பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவு சிவப்பு எச்சரிக்கை வலயமாக பிரகடனப்படுத்த ப்பட்டுள்ளதாக, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டொக்டர். ஏ.யூ. அப்துல் சமட், நேற்று (12) தெரிவித்தார்.

டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்களை வைத்திருந்த 42 நபர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை, மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 20 சதவீதத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் டெங்கு தாக்கத்தை ஏற்படுத்தும் நுளம்பு குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் கே.கிரிசுதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சிறுவர்கள், பெண்கள் டெங்கு தாக்கத்துக்கு உள்ளாகும் நிலை அதிகரித்து வருவதாகவும் இது இன்னுமோர் அபாயகரமான சூழலை காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

வடகீழ் பருவபெயர்ச்சி மழையின் பின்னர் கொரோனா முடக்க நிலையிலிருந்து வழமைக்குத் திரும்பியுள்ள நிலையில், டெங்கின் தாக்கம் படிப்படியாக அதிகரித்து வருகின்றது. கடந்த டிசெம்பர் மாதம் 10 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டிருந்தார்கள். 2022ஆம் ஆண்டின் முதல் வாரத்திலேயே 06 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இந்த நிலையானது எதிர்காலத்தில் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# மோதல்...

தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மூன்றாம் வருடத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், நான்காம் வருட மாணவன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, கடந்த ஒருமாத கால பகுதிக்குள் விஞ்ஞான பீட மாணவர்களுக்கு இடையில் இடம்பெற்ற மூன்றாவது மோதல் சம்பவம் இதுவாகும்.

சில வாரங்களுக்கு முன்னர் பகடிவதை கட்டளையை மீறியதாக முதலாம் வருட மாணவன் மீது தாக்குதல் மேற்கொண்ட சிரேஷ்ட மாணவன் ஒருவர், பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கில் இளைஞர், யுவதிகளின்

# பிரச்சினைகளை தீர்க்கவேண்டும்

## சஜித்திடம் யாழ். மறை மாவட்ட ஆயர்,

■ எம்.றொசாந்த், என்.ராஜ், வி.நிதர்ஷன்

தனது பிறந்த நாளான நேற்று (12) வட மாகாணத்துக்கு விஜயம் செய்திருந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை நேரில் சந்தித்து ஆசிர்வாதம் பெற்றார்.

இதன்போது இடம்பெற்ற கலந்துரையாடலில், வடக்கில் இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு இல்லாத பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என யாழ். மறை மாவட்ட ஆயர், எதிர்க்கட்சித் தலைவரிடம் கோரிக்கை



விடுத்துள்ளார்.

இக்கலந்துரையாடலில், முன்னாள் அமைச்சர் புத்திக பத்திரண, முன்னாள் இராஜாங்க அமைச்சர் இரான் விக்கிரமரட்ன ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் கருத்துரைத்த ஆயர், "நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர், தன்னாலான முயற்சியை மேற்கொண்டு அபிவிருத்தி வேலைகளைச் செய்து வருகின்றார். ஏற்கெனவே எதிர்க்கட்சியில் இருந்தவர்கள் இவ்வாறு அபிவிருத்தி வேலைகளை செய்யவில்லை.

"ஆகவே, அவருடைய இந்தப் பணியை பாராட்ட வேண்டும். எத்தனையோ வைத்தியசாலைகளுக்கு சிறுநீரக நோய்க்குரிய இயந்திரத் தொகுதிகளை வழங்கியுள்ளார். அத்தோடு, பாடசாலைகளுக்கும் உதவிகள் வழங்கி வருகின்றார். சுகாதாரமும் கல்வியும் அவருடைய முக்கிய குறிக்கோளாகக் காணப்படுகின்றன.

"நான், மூன்று விடயங்களை அவரிடம் குறிப்பிட்டேன். அதாவது, கல்வி, மீன்பிடி, விவசாயம் இந்த மூன்று துறைகளையும் வடக்கில் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

அத்தோடு, இந்த இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு இல்லாத பிரச்சினை பெரும் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரினேன். அதற்கு அவர், அரசாங்கத்தில் இருப்பவர்கள் தான் அதனை செய்ய முடியும் எனத் தெரிவித்தார்" என்றார்.



ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த கூட்டம்

## கொழும்பில் நடைபெறும்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்தக் கூட்டம் இந்த வருடம் மே மாதம் 2ஆம் திகதி தொடக்கம் 5ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடுவதற்காக, வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தலைமையில் நேற்று முன்தினம் (11) வெளிநாட்டு அமைச்சில் நடைபெற்றது. வங்கியின் ஸ்தாபக உறுப்பினரான இலங்கை, ஆசிய அபிவிருத்தி வங்கியின் கௌரவமான வருடாந்தக் கூட்டத்தை தெற்காசியப் பிராந்தியத்தில் நடத்தும் இரண்டாவது நாடாகும். கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் 68 உறுப்பு நாடுகளைச் சேர்ந்த நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கிகளின் ஆளுநர்கள் உட்பட 3,000 இற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்பதுடன் நெறிமுறை ஏற்பாடுகளை வெளிநாட்டு அமைச்சு வழிநடத்தி ஒருங்கிணைக்கும். நிகழ்வை வெற்றிகரமாக நடத்துவதற்கு வெளிநாட்டு அமைச்சின் முழு ஆதரவையும் வழங்க வெளியுறவுச் செயலாளர் உறுதியளித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் செயலாளர் முஹம்மது எஹ்சான் தலைமையிலான வங்கியின் உயர்மட்ட பிரதிநிதிகள் குழுவினர், வதிவிட அலுவலகத்தின் உயர்மட்ட அதிகாரிகள் சந்திப்பில் கலந்து கொண்டனர்.



பெண் உறுப்பினர்களின் சம்மேளனத்தின்

## புதிய நிர்வாகம் தெரிவு

உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களின் சம்மேளனத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் நேற்றைய தினம் (12) நடைபெற்றது

நேற்று காலை 9.30 மணியளவில் இந்தக் கூட்டம் நடைபெற்றதுடன், சம்மேளனத்தின் புதிய நிர்வாகத்தெரிவும் இடம்பெற்றது.

யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 17 உள்ளூராட்சி மன்றங்களையும் உள்ளடக்கிய வகையில் நடத்தப்பட்ட இந்தப் புதிய நிர்வாக தெரிவில், சம்மேளனத்தின் புதிய தலைவராக வேலணை பிரதேச சபையின் உறுப்பினர் திருமதி அனுஷியா ஜெயகாந்த் தெரிவு செய்யப்பட்டார்.

அச்சம்மேளனத்தின் புதிய செயலாளராக வலிமேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் திருமதி ஜெயகாந்தன் துவாரகாவும் பொருளாளராக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் திருமதி தயாளராஜன் பௌலீனா சுபோஜினியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன் குறித்த சம்மேளனத்தின் உப-தலைவராக நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் திருமதி கௌசலா சிவாவும் உப செயலாளராக யாழ் மாநகர சபை உறுப்பினர் திருமதி சந்திரகுமார் அனுசியாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 17 உள்ளூராட்சி மன்றங்களையும் உள்ளடக்கிய வகையில் தலா ஒவ்வொரு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிங்கப்பூர் பிரஜை சிக்கினார்

சிங்கப்பூர் பிரஜை வசிக்கும், தலங்கம பெலவத்தை வீட்டை திடீர் சோதனைக்கு உட்படுத்திய போது, அங்கிருந்து சட்டவிரோதமான பொருட்கள் கைப்பற்றப்பட்டன. சந்தேகத்தின் பேரில், அவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

ஹாஷ் எண்ணெய் போதைப்பொருள், கேரள கஞ்சா 50 கிராம், ஹாஷ் எண்ணெய் தடவப்பட்ட பிளாஸ்டிக் குப்பிகள் மூன்று, மின்னணு தராசு, கஞ்சா புகையை இழுக்கும் இரண்டு உபகரணங்கள், ஜேர்மனியில் உற்பத்தி செய்யப்பட்ட குவிநாசி என்றழைக்கப்படும் வாயு பிஸ்டல், இரும்பு தட்டுகள், கறுப்பு நிறத்திலான வில், அந்த வில்லுக்கு பயன்படுத்தப்படும்



அம்புகள் 21, சிறிய வில் ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிட்ட பொருட்களை சந்தேகநபரான சிங்கபூர் பிரஜை, ஏன்? வைத்திருந்தார் என்பது தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுப்பதற்காக அவர், தலங்கம பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



பேருவளையில் பிரதான நீர்க்குழாய் வெடிப்பு

## 30,000 குடும்பங்கள் பாதிப்பு

■ துஷிதகுமார சில்வா

பேருவளை- ஹெட்டிமுல்ல காலி வீதியின் முச்சந்தியிலுள்ள பிரதான நீர் குழாயில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாக, அந்த இடம் தாழிறங்கியுள்ளது.

இதனால் பேருவளை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள 30,000 குடும்பங்கள் குடிநீரின்றி பாதிக்கப்பட்டுள்ளன.

எனினும், வெடித்த நீர்க்குழாயை சீர்செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால், நீர் விநியோகம் கூடிய விரைவில் வழமைக்குத் திரும்புமென களுத்துறை தேசிய நீர்வழங்கல் சபையின் பிரதான பொறியியலாளர் எம். அஜித் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வந்து சென்ற

## ஹங்கேரி நாட்டின் வெளிநாட்டு அமைச்சர்

■ டீ.கே.ஜீ. கபில

ஹங்கேரி நாட்டின் வெளிநாட்டு அமைச்சர் Peter Szijjarto நேற்று (12) காலை, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக நாட்டை வந்தடைந்தார்.

அவருடன் 20 பேரடங்கிய தூதுக்குழுவும் வருகைதந்துள்ளது. அவர்கள் ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வந்துள்ளனர்.

ஹங்கேரிக்கு உரித்துடைய WZZ -504 எனும் விமானத்தின்



ஊடாக நேற்று (12) அதிகாலை 4.42 மணிக்கு விமான நிலையத்தை வந்தடைந்த அவர்களை, இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய வரவேற்றார்.

தங்களுடைய விஜயத்தை முடித்துக்கொண்டு, தூதுக்குழுவினர் நேற்று (12) மாலை 4.30க்கு நாட்டை விட்டு புறப்பட்டுச் சென்றனர்.

12 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு

## அச்சமின்றி தடுப்பூசியை செலுத்தவும்

கொரோனா தொற்றையடுத்து ஏற்படும் மரணம், தடுப்பூசியால் தவிர்க்கப்பட்டு, தொற்றின் பரம்பல் குறைக்கப்படுவதால் இலங்கையிலிருக்கும் 70 சதவீதமானவர்கள் தடுப்பூசியை செலுத்தியிருப்பது அவசியம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக் குழு உறுப்பினரான வாசன் இரட்ணசிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

எனவே, 12 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளை, பெற்றோர் அச்சமின்றி தடுப்பூசியை செலுத்திக்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்றார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தில் நேற்று (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், தடுப்பூசிகளின் செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பில், கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், தெளிவான வழிகாட்டியை சுகாதார அமைச்சுக்கும் ஜனாதிபதிக்கும் வழங்கியிருந்தது.

இந்த வழிகாட்டியானது, ஐக்கிய அமெரிக்காவின் சீ.டி.சி நிறுவனம் ஐக்கிய இராச்சியத்தில் இருக்கின்ற என்.எச்.எஸ், உலக சுகாதார ஸ்தானம், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் என்பன தடுப்பூசி தொடர்பில் எவ்வாறான பரிந்துரைகளை வழங்கியுள்ளன என்பதை கருத்திற்கொண்டு, அதேபோல்



பைஸர் தடுப்பூசியை தயாரித்த நிறுவனம் வழங்கியுள்ள பரிந்துரைகளை கருத்திற்கொண்டு, நாம் இந்த வழிகாட்டியை உருவாக்கி, சுகாதார அமைச்சிடம் வழங்கியுள்ளோம்.

அந்த வழிகாட்டிக்கு அமைய, தொற்றினுடைய பரம்பல் குறைக்கப்பட வேண்டுமாயின், நாட்டில் 70 சதவீதத்துக்கு அதிகமானோர் இந்தத் தடுப்பூசியைச் செலுத்திக்கொண்டிருக்க வேண்டும்.

ஆகவே, இந்த விடயங்களை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது, 12 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசியை செலுத்துவது அவசியமாகும். தொற்று நோய் தொடர்பான ஆலோசனைக்குழு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. இவை யாவும் விஞ்ஞானபூர்வமாக மருத்துவ ரீதியாக எடுக்கப்பட்ட முடிவுகளாகும்.

தற்போது பாடசாலைகளின் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், 12-15 வயதுக்கு உட்டபவர்களுக்கு தடுப்பூசியை செலுத்தும் போது, அவர்களை நோய் தொற்றிலிருந்து பாதுகாப்பு வழங்கலாம் என்றார்.

பேராசிரியர் உவைஸுக்கான

## நூற்றாண்டு விழாவும் நினைவு மாநாடும்

■ எம்.ஏ.றமீஸ்

பேராசிரியர் அல்லாமா மா.மு. உவைஸுக்கான நூற்றாண்டு விழாவும் நினைவு மாநாடும், கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (18) பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் றமீஸ் அப்துல்லா தெரிவித்தார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித் துறையின் ஏற்பாட்டில், உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளவுள்ளார்.

அத்தோடு, கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் பேராசிரியர் சம்பத்



அமரதுங்க ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்துகொள்ளவுள்ளனர்.

இலங்கையின் இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தின் தந்தை எனப் போற்றப்படும் பேராசிரியர் அல்லாமா மஹ்மூத் முஹம்மது உவைஸ் நினைவாக நடைபெறும் இந்நிகழ்வின்போது, நினைவு முத்திரை வெளியிட்டு வைக்கப்படவுள்ளதோடு, அன்னாருக்கான நூற்றாண்டு ஞாபகச் சின்னமும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

## பஞ்சத்திலிருந்து நாட்டை மீடக கூட்டமைப்பு தயார்

நாட்டில் ஏற்படப்போகும் பஞ்சத்தில் இருந்து நாட்டை எவ்வாறு மீட்கலாம்? மக்களை எவ்வாறு மீட்கலாம் என்பது குறித்தும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் சில திட்டங்கள் உள்ளன என்று பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, களுதாவளை அன்பின் வீடு மற்றும் குறித்த இல்லத்தில் உள்ள விசேட தேவையுடைய குழந்தைகளுக்கு, உதவி திட்டங்களை வழங்கி வைத்ததன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவித்த அவர், "உண்மையிலேயே இந்த நாட்டில் விசேட தேவையுடையவர்கள் மாத்திரமல்ல, இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் எதிர்வரும்



காலங்களில் நாம் உலர் உணவுப்பொருட்கள் உட்பட அத்தியாவசிய பொருட்களை வழங்க வேண்டிய கட்டாயம் வரும் என்பது நாட்டிலுள்ள செய்திகளை பார்க்கும் போது அறியக்கூடியதாக இருக்கின்றது.

இந்த நாட்டிலே இடம்பெறும் அனைத்து விடயங்களையும் பார்க்கின்ற போது, மிகவும் ஆபத்தான ஒரு காலம் எதிர்காலத்தில் வரும் என்பதை அறியக்கூடியதாக இருகின்றது.

நாட்டில் ஏற்படப் போகும் பஞ்சத்தில் இருந்து நாட்டை எவ்வாறு மீட்கலாம்? மக்களை எவ்வாறு காப்பாற்றலாம் என்பது குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் சில திட்டங்கள் உள்ளன.

அதுகுறித்து நாங்கள் பலதடவைகள் குறிப்பிட்டிருகின்றோம். தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் உள்ள நாம், பல நாடுகளுடன் தொடர்புடையவர்கள். எனவே எங்களுடைய பிரச்சினைகளை அரசாங்கம் தீர்க்குமாக இருந்தால், அந்த நாடுகளின் உதவிகளை இலங்கை அரசாங்கத்துக்கு பெற்றுக் கொடுக்க முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மிஸ்ட் கோல் காதலால்

# யுவதி கூட்டு வன்புணர்வு

எம்.றொசாந்த்

தவறுதலான தொலைபேசி அழைப்பின் (மிஸ்ட் கோல்) ஊடாக அறிமுகமான காதலனை நம்பி சென்ற 18 வயது யுவதியை நான்கு பேர் கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய பின்னர், யுவதியை வீதியில் இறக்கி விட்டு தலைமறைவாகியுள்ளனர் என்று பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.




நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் பாதிக்கப்பட்ட யுவதி, நேற்று முன்தினம் (11) பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யுவதியின் தொலைபேசிக்கு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வந்திருந்த தவறுதலான தொலைபேசி அழைப்பின் ஊடாக அறிமுகமான இளைஞனுடன் நட்பு ஏற்பட்டு பின்னர் அது காதலாக மாறியுள்ளது.

இருவரும் ஒருவரை ஒருவர் நேரில் சந்திக்காத நிலையில் காதலித்து வந்துள்ள நிலையில், யுவதியை திருமணம் செய்வதற்கு தயாராக இருப்பதாகவும், வீட்டை விட்டு வெளியேறி தன்னுடன் வருமாறும், அதன் போது வீட்டில் இருந்து நகைகள் மற்றும் பணம் என்பவற்றை எடுத்து வருமாறும் குறித்த இளைஞன், செவ்வாய்க்கிழமை (11) கூறியுள்ளார்.

இளைஞனின் ஆசை வார்த்தையை நம்பிய குறித்த யுவதி, தன்னுடைய சங்கிலி உள்ளிட்ட சொற்ப நகைகளையும், 40 ஆயிரம் ரூபாய் பணத்தினையும் எடுத்துக்கொண்டு இளைஞன் கூறிய இடத்திற்கு சென்றுள்ளார். அங்கு நின்றிருந்த குறித்த இளைஞன் அப்பெண்ணை தனது மோட்டார் சைக்கிளில் அழைத்துக்கொண்டு , ஐஸ்கிறீம் கடை ஒன்றுக்கு அழைத்து சென்றுள்ளார்.

அங்கு இருவரும் சிற்றுண்டி சாப்பிட்டு , ஐஸ் கிறீம் குடித்த பின்னர் காலை 10 மணியளவில் இளைஞன், அந்த யுவதியை தன்னுடைய தாய்க்கு அறிமுகம் செய்து வைப்பதாக, வடமராட்சி திக்கம் பகுதிக்கு அழைத்து சென்றுள்ளார்.

அங்கு ஆள் நடமாற்றம் அற்ற பகுதி ஒன்றுக்கு யுவதியை அழைத்து சென்று ஆசை வார்த்தைகளை கூறி, உறவு கொண்டுள்ளார். பின்னர , தண்ணீர் வாங்கி வருவதாக கூறி அவ்விடத்தில் யுவதியை தனியே விட்டு விட்டு சென்றுள்ளார்.

இளைஞன் சென்று சில நிமிடங்களில் மூன்று இளைஞர்கள் அவ்விடத்திற்கு சென்று யுவதியை பலாத்காரமாக வன்புணர்ந்துள்ளனர்.

பின்னர் யுவதியை அழைத்து சென்ற இளைஞனும் அவ்விடத்துக்கு வந்து நான்கு பேருமாக யுவதியை கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர்.

பின்னர் யுவதியிடம் இருந்த 40 ஆயிரம் ரூபாய் பணம், நகைகள், அலைபேசி என்பவற்றை கொள்ளையடித்த பின்னர், யுவதியை அழைத்து வந்த இளைஞன் யுவதியை மீட்டும் தனது மோட்டார் சைக்கிளில் அழைத்து சென்று யுவதியின் கிராமத்திற்கு அருகில் வீதியில் இறக்கி விட்டு தலைமறைவாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் யுவதியினால் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், சம்பவம் இடம்பெற்ற பகுதி பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதி என்பதனால், முறைப்பாட்டை நெல்லியடி பொலிஸார் பருத்தித்துறை பொலிஸாரிடம் பாரப்படுத்தியுள்ளனர்.

பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில் , சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தில் துன்னாலை பகுதியை சேர்ந்த நான்கு இளைஞர்களை அடையாளம் கண்டுள்ளனர்.

அவர்களை கைது செய்து விசாரணைகளை முன்னெடுக்க முயன்ற போது நான்கு பேரும் நேற்று முன்தினத்தில் இருந்து தலைமறைவாகியுள்ளமை பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

அதனால் குறித்த நான்கு இளைஞர்கள் மீதும் பொலிஸாருக்கு வலுவான சந்தேகம் ஏற்பட்டுள்ள நிலையில் அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்னர்.

இதேவேளை, கடந்த வருடம் சுன்னாகம் பகுதியை சேர்ந்த யுவதியை ஒருவரை முகநூல் ஊடாக அறிமுகமான இளைஞன் அந்த யுவதியை காதலிப்பதாக கூறி முள்ளி பகுதிக்கு அழைத்து சில இளைஞர்கள் இணைந்து கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்முனையில்

# கைத்தறி கண்காட்சி

## கிழக்கு ஆளுநர் ஆரம்பித்து வைத்தார்

அஸ்லம் எஸ்.மௌலானா

கிழக்கு மாகாண கிராமிய தொழித்துறை திணைக்களம் ஒழுங்கு செய்துள்ள உள்ளூர் கைத்தொழில் உற்பத்திகளின் கண்காட்சி மற்றும் வர்த்தக சந்தை, கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் நேற்று (12) பிற்பகல் ஆரம்பமானது.



கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், பிரதம அதிதியாக கலந்துகொண்டு, இதனை ஆரம்பித்து வைத்தார்.

கைத்தறித் துணிகள், உள்நாட்டு ஆடைகளின் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, பற்றிக் மற்றும் உள்நாட்டு ஆடைகள் உற்பத்தி இராஜாங்க அமைச்சின் ஆலோசனை, வழிகாட்டலில் இரண்டு நாள்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த வர்த்தக சந்தையில் பெரும் எண்ணிக்கையிலான உற்பத்திகள் அடங்கிய காட்சி கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

ஒவ்வொரு காட்சிக் கூடத்தையும் பார்வையிட்ட ஆளுநர், உற்பத்திகள் பற்றிய விவரங்களை கேட்டறிந்து பாராட்டுத் தெரிவித்ததுடன், கைத்தறித் துணிகள் மற்றும் ஆடைகளைக் கொள்வனவு செய்தார்.

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக குறிப்பிட்ட ஆளுநர், கிழக்கு மாகாணத்தில் கைத்தறி உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு தாம் முன்னிற்பதாகவும் கைத்தறி உற்பத்தியாளர்கள் தமது தொழில்களை நவீன வசதிகளை கொண்டு விருத்தி செய்வதற்குத் தேவையான உதவிகள் பெற்றுத்தரப்படும் என்றும் இதன்போது உறுதியளித்தார்.

## தீகவாபியில் புதிய வைத்தியசாலை

அஸ்லம் எஸ்.மௌலானா

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிரிவுக்குட்பட்ட தீகவாபி பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட வைத்தியசாலையின் திறப்பு விழா, நேற்று (12) நடைபெற்றது.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், இவ்வைத்தியசாலையைத் திறந்து வைத்தார்.

“கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் 18 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இவ்வைத்தியசாலையில் அனைத்து நவீன வசதிகளை ஏற்படுத்துவதற்கும் தேவையான மருத்துவ உபகரணங்களை பெற்றுத்தருவதற்கும் காலக்கிரமத்தில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்” என ஆளுநர் அனுராதா யஹம்பத் இதன்போது உறுதியளித்தார்.

இத்திறப்பு விழாவில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார், மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டொக்டர் எம்.எஸ்.தௌபீக், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.எம். வாஜித், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சி.எம். மாஹிர் ஆகியோரும் அதிதிகளாக கலந்துகொண்டனர்.





## மாணவர்களுக்கு பைஸர்...

கோறளைப்பற்று மத்தி, வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. தரம் 7 முதல் 10 வரையான வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கே, இவ்வாறு முதலாவது தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகின்றது. (படப்பிடிப்பு – எச்.எம்.எம்.பர்ஸான்)

## ஓவியங்கள் மூலம் விழிப்புணர்வு

றாசிக் நபாயிஸ்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சிந்தனைக்கமைய, 2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெற்றுச் சுவர்களைஅழகுபடுத்தும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.



கொரோனாவுக்குப் பின்னர் அத்தொற்று நோய் சம்பந்தமான பல விழிப்புணர்வுகள் இக்காலப்பகுதியில் இடம்பெற்று வருகின்றன.



அதனடிப்படையில், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கல்முனை நிலையப் பொறுப்பதிகாரி காரியாலயத்தின் முன்னால் உள்ள சுவர்களில் தனவந்தர்களின் உதவியுடன், பொதுமக்களையும், பாடசாலை மாணவர்களையும் விழிப்புணர்வூட்டும் சுவர் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நிலையப் பொறுப்பதிகாரி எம்.எம்.நௌபரின் வழிகாட்டலில், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உத்தியோகத்தர் ஏ.எஸ்.எம்.முர்சித்தின் பூரண ஒத்துழைப்புடன் இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் கொரோனா பற்றிய விழிப்புணர்வுப் படங்களும் நீரின் முக்கியத்துவத்தையும் உணர்த்தும் படங்களும் வரையப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பகிர்ந்து உண்போம் ...

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு, முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு “பகிர்ந்து உண்போம் ”எனும் தொனிப்பொருளில், பொங்கல் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான் மற்றும் கரைதுறைப்பற்று. ஆகிய நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு இவை வழங்கப்பட்டன.

அந்தவகையில், முள்ளியவளை பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட 50 பேருக்கான பொங்கல் பொருள்கள் வழங்கும் நிகழ்வு, கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் தலைமையில் முள்ளியவளையில் இடம்பெற்றது


இந்த நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் க.சுகிர்தன், முல்லைத்தீவு மாவட்ட அந்தணர் ஒன்றிய தலைவர் உள்ளிட்ட அதிதிகள் பலர் கலந்துகொண்டு பொருள்களை வழங்கி வைத்துள்ளனர்

மாங்குளத்தில் கோவில் ஒன்றில்

## பூஜை வழிபாடு இடம்பெறாது

நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு, மாங்குளத்தில் கோவில் ஒன்றில் பூஜை வழிபாடு இடம்பெறாது தடுக்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



மாங்குளம், இத்திமரத்தடி சித்தி விநாயகர் கோவிலில் கடந்த 09ம் திகதி தொடக்கம் இவ்வாறு பூஜைகள் இடம்பெறவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தனி நபர்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக கோவில் பூஜைகள் நிறுத்தப்பட்டு, பூஜை செய்து வந்த கோவில் குருக்களும் கோவிலில் இருந்து வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இக்கோவிலில், 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரச உதவியில் பல புனரமைப்பு வேலைகள் இடம்பெற்றுள்ளன. பொதுமக்களின் வழிபாட்டுத் தலத்தை சிலரின் தனிப்பட்ட பிரச்சினைகளுக்காக பூஜைகள், விழாக்கள் இடம்பெறாமல் தடுக்கப்படுவது நியாயமற்றது.

இந்துக் கலாசார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பிரதேச செயலகத்தில் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த கோவில் மாங்குளம் ஏ-9 வீதிக்கு அருகில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெண் உறுப்பினர்களின் சம்மேளனத்தின்

## புதிய நிர்வாகம் தெரிவு

உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களின் சம்மேளனத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் நேற்றைய தினம் (12நடைபெற்றது

நேற்று காலை 9.30 மணியளவில் US தனியார் வீடுதியில், இந்தக் கூட்டம் நடைபெற்றதுடன், சம்மேளனத்தின் புதிய நிர்வாகத்தெரிவும் இடம்பெற்றது.

யாழ் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 17 உள்ளூராட்சி மன்றங்களையும் உள்ளடக்கிய வகையில் நடத்தப்பட்ட இந்த புதிய நிர்வாக தெரிவில், சம்மேளனத்தின் புதிய தலைவராக வேலணை பிரதேச சபையின் உறுப்பினர் திருமதி அனுஷியா ஜெயகாந்த் தெரிவு செய்யப்பட்டார். அச்சம்மேளனத்தின் புதிய செயலாளராக வலிமேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் திருமதி ஜெயகாந்தன் துவாரகாவும் பொருளாளராக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் திருமதி தயாளராஜன் பௌலீனா சுபோஜினியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன் குறித்த சம்மேளனத்தின் உப-தலைவராக நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் திருமதி கௌசலா சிவாவும் உப செயலாளராக யாழ் மாநகரசபை உறுப்பினர் திருமதி சந்திரகுமார் அனுசியாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை யாழ் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 17 உள்ளூராட்சி மன்றங்களையும் உள்ளடக்கிய வகையில் தலா ஒவ்வொரு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## பால்மா விநியோகத்தில் குழறுபடிகள்

எச்.எம்.எம்.பர்ஸான்

நாட்டில் பால்மாக்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், வாழைச்சேனை பிரதேசத்திலும் பால்மா விநியோகத்தில் குழறுபடிகள் ஏற்பட்டுள்ளதாக வாழைச்சேனை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

பால்மாக்களை விநியோகம் செய்யும் நிறுவனங்கள், சிறு வியாபாரத் தளங்களுக்கு பால்மாக்களை வழங்காமல், பெரிய வியாபாரத் தளங்களுக்கு மாத்திரம் வழங்கிச் செல்கின்றன.



இதனால், சிறு வியாபாரிகளும் நுகர்வோரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்தோடு, பெரிய வியாபார நிலையங்களில் வேறு பொருள்களை கொள்வனவு செய்வோர்களுக்கு மாத்திரமே பால்மாக்கள் வழங்கப்படுகின்றன.

இந்த விடயம் தொடர்பாக கவனம் செலுத்தி, அனைவருக்கும் பால்மாக்கள் கிடைக்க வேண்டும் என வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளர், வாழைச்சேனை பொலிஸ் உதவிப் பொறுப்பதிகாரி ஆகியோரின் கவனத்துக்கு வர்த்தக சங்கத்தினர் கொண்டு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை

# நழுவ விடாதீர்கள்

## அரவிந்தகுமார் எம்.பி கோரிக்கை

■ எம். செல்வராஜா

இலங்கை பொலிஸ் சேவையில் பயிலுநர் பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிக்கு, இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆகவே, கிடைத்திருக்கும் இவ்வரிய சந்தர்ப்பத்தை எமது சமூக இளைஞர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளும்படி, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் கேட்டுள்ளார்.



அறிவுறுத்தல்களின் பிரகாரம் தகுதிகளைக் கொண்ட இளைஞர்கள், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 31.01.2022க்கு முன்பதாக பணிப்பாளர், பயிலுநர் ஆட்சேர்ப்புப் பகுதி, இல. 375,1ஆம் மாடி, ஸ்ரீசம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு -06. என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

எனவே கிடைத்திருக்கும் இச்சந்தர்ப்பத்தை எமது சமூக இளைஞர்கள் கிரமமாகவும் முறையாகவும் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். பொலிஸ் சேவைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுடையவர்கள் இல.19, பதுளுப்பிட்டிய ரோட், பதுளை பணியகத்தினர் மூலம் ஆலோசனைகள், அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பற்றமலை பாலத்தை பார்ப்பார் இல்லை

■ நவி

ஹேவாஹேட்ட, ஹோப் தோட்டத்தில் இருந்து பற்றமலைக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ள பிரதான பாலமானது, சீரற்ற வானிலையால் இரண்டாக உடைந்து போயுள்ளது. இதனால் சுமார் 300 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, பற்றமலை தோட்டத்தில் உள்ள பெரும்பாலான மக்கள் விவசாயத்தை தமது ஜீவனோபாயமாக கொண்டுள்ள நிலையில், தமது உற்பத்திப் பொருட்களை இந்தப் பாலத்தில் ஊடாக கொண்டு செல்வர்.

அத்துடன், பாடசாலை மாணவர்கள் தொடக்கம் அனைவரும் இந்தப் பாலத்தையே பயன்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில், இந்தப் பாலம் உடைந்து மூன்று மாதங்கள் கடந்தும், இதுவரை இதனை புனரமைத்து தர யாரும் முன்வரவில்லை என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

# தேர்த்திருவிழா

■ நவி

ஹேவாஹேட்ட நகர் ஸ்ரீ கோதண்ட இராமர் கோவிலின் 16ஆவது தேர்த்திரு விழா இன்று (13) நடைபெறவுள்ளது.

இன்று காலை 8.30 மணியளவில் விக்னேஸ்வர வழிப்பாட்டுடன் புண்ணியாகவா ஜனம் நடைபெற்று 9 மணியளவில் கங்கை கரையிலிருந்து பாற்குடபவணி ஆரம்பமாகி கோவிலை வந்தடையும்.

ஸ்ரீ கோதண்ட இராம பிரானுக்கு திரவிய அபிஷேகத்தை தொடர்ந்து 108 அஸ்டோத்திர சகஸ்திரநாம சங்காபிஷேகம் நடைபெறும்.

நாளை (14) தலுவு பூஜையுடன் விஷேட வசந்த மண்டப பூஜை, மகேஸ்வர பூஜை இடம்பெறவுள்ளதுடன், ஸ்ரீ சீதா லக்ஷ்மன சமேத கோதண்ட இராமர் பிரான் தேர் பவனியும் நடைபெறவுள்ளது.



மஸ்கெலியா பிரதேச சபையின் உபதவிசாளர்

# கறுப்புப் பட்டி அணிந்து வந்தார்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

மஸ்கெலியா பிரதேச சபையின் உபதவிசாளர் பெரியசாமி பிரதீபன் உள்ளிட்ட எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் சிலர், நேற்று (12) கறுப்புப் பட்டியணிந்து மாதாந்த சபை அமர்வுகளில் கலந்துகொண்டனர்.

பிரதேச சபை தவிசாளர் கோவிந்தன் செண்பகவள்ளி தலைமையில், நேற்று (12) அமர்வுகள் ஆரம்பமாகின. இதன்போது, அண்மையில் ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் இருவரால் தாக்குதலுக்கு இலக்கானமை, மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட இடங்களில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத கட்டுமானங்களுக்கு எதிராக பிரதேச சபை எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை எனத் தெரிவித்தே சுதந்திர கட்சியின் உறுப்பினரும் பிரதேச சபையின் உப தவிசாளருமான பிரதீபனும் எதிர்க்கட்சியின் ஏனைய உறுப்பினர்களும் சபைக்கு கறுப்புப் பட்டியணிந்து வருகை தந்தனர்.







# நியமனங்கள் வழங்கப்பட்டன

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சௌபாக்கிய நோக்கு திட்டத்தின் கீழ், இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரி மற்றும் டிப்ளோமாதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு அண்மையில், சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில், சப்ரகமுவ மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. (படங்கள்: சிவாணிஸ்ரீ)

குயின்ஸ்பெரியில்

# சிறுத்தையின் உடலம் மீட்பு

■ எஸ்.கணேசன்

பத்தனை, குயின்ஸ்பெரி தோட்ட தொழிற்சாலைக்கு செல்லும் வீதிக்கு அருகாமையில், உயிரிழந்த நிலையில் சுமார் இரண்டடி நீளமான சிறுத்தையின் உடலம் நேற்று (12) காலை மீட்கப்பட்டுள்ளதாக பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

> குயின்ஸ்பெரி தோட்ட தொழிற்சாலைக்கு செல்லும் வீதியில், சுமார் இரண்டடி நீளமான சிறுத்தையின் உடலம் மீட்கப்பட்டுள்ளது

பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்தே குறித்த உடலம் மீட்கப்பட்டுள்ளது.

சிறுத்தையின் உடலில் காயங்கள் காணப்படுகின்றன எனத் தெரிவித்த பத்தனை பொலிஸார், இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளனர். சிறுத்தை தொடர்பாக கம்பளை வனஜீவராசிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.



பாடசாலைகளில்

# தொற்று நீக்குதலை நீடிக்க யோசனை

## சபையின் உறுப்பினர்கள் ஏகோபித்த இணக்கம்



■ ஆ.ரமேஸ்

நுவரெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் காணப்படும் சகல பாடசாலைகளுக்கும், சுழற்சி முறையில் கொரோனா வைரஸ் ஒழிப்புக்கான தொற்று நீக்கிகளை, தொடர்ந்து தெளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான தீர்மானம், நுவரெலியா பிரதேச சபை உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான முதலாவது சபை அமர்வு, தவிசாளர் வேலு யோகராஜ் தலைமையில், நேற்று (12) காலை நடைபெற்றது.

இலங்கையில் கொரோனா தொற்று குறையவில்லை. புதிய வைரஸ்களும் தாக்கத்தை செலுத்தி வருகின்றன. இந்நிலையில், நுவரெலியாவை நோக்கி வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் தொடர்ச்சியாக வருகை தருகின்றனர். எனினும், கொரோனா தொற்றிலிருந்து நுவரெலியா வாழ் மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையை தமது பிரதேச சபை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகிறது. பொதுச் சுகாதார வழிகாட்டல்களை தொடர்ச்சியாக பின்பற்றவேண்டும் என்று சபையின் தவிசாளர் வேலு யோகராஜ் தெரிவித்தார்.

இதேவேளை, எமது மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு, சகல பாடசாலைகளிலும் தொற்றுநீக்கி தெளிக்கும் நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டிய கட்டாயம் உள்ளதால், இதற்கான ஒத்துழைப்பையும் ஆதரவையும் சபை உறுப்பினர்கள் வழங்க வேண்டுமெனக் கேட்டு, அது தொடர்பான பிரேரணையை முன்வைத்தார். இந்தப் பிரேரணைக்கு, நேற்றைய அமர்வில் கலந்துகொண்ட அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு வழங்கினர்.

# பூனாகலைக்கு புதிய நீர்ப்பாசனத் திட்டம்

பூனாகலை 3 வது பிரிவில் அமைக்கப்பட்டு வரும் புதிய நீர்ப்பாசன திட்டத்தை, இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் நேரில் விஜயம் செய்து பார்வையிட்டார்.

2020ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்தின் போது, மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய, செந்தில் தொண்டமானின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.



விசேட தேவையுடைய மாணவர்களுக்கு

# விசேட கரிசனை

■ டி.ஷங்கீதன்

நுவரெலியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட விசேட தேவையுடைய பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து இலண்டன், கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜேர்மனி ஆகிய நாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் நிதியுதவியின் கீழ், 3 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

மேற்படி நிகழ்வு, நுவரெலியா வலய கல்வி பணிமனையின் கேட்போர் கூடத்தில் வலய கல்வி பணிப்பாளர் நிஹால் அழககோன் தலைமையில் நடைபெற்றதுடன், இதற்கான ஏற்பாடுகளை திறந்த பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் டொக்டர் சசிகலா குகமூர்த்தி ஊடாக, நுவரெலியா கல்வி வலயத்தின் விசேட கல்விக்கான ஆசிரிய ஆலோசகர் திருமதி மங்களேஸ்வரி மகேந்திரன் மேற்கொண்டிருந்தார்.



# ஹங்குராங்கெத்த கல்வி வலயத்தில் நிதி மோசடி

## பணிப்பாளரும் உறுதிப்படுத்தினார்

■ ஷங்கீதன்

நுவரெலியா, ஹங்குரன்கெத்த கல்வி வலயத்தில் 89 இலட்சம் ரூபாய் நிதி மோசடி இடம்பெற்றுள்ளமையை, மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் அமரசிரி பியதாஸ உறுதிப்படுத்தியுள்ளார்.

“ஹங்குரன்கெத்த கல்வி வலயத்தில் கடமையாற்றுகின்ற உத்தியோகஸ்தர் ஒருவரே இந்த நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ள நிலையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம்” என்று மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் அமரசிரி பியதாஸ தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாண கல்வி செயலாளர் மதுபானி பியசேன ஊடாக, கடந்த 29ஆம் திகதி மத்திய மாகாண பிரதம செயலாளர் காமினி ராஜரத்னவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் இந்த விடயம் தொடர்பில் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கல்வி அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றி வரும் நபரால், கடந்த 2012ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை இந்த நிதி மோசடி இடம்பெற்றுள்ளது.

ஆசிரியர்கள் அல்லாதவர்களின் பெயர்களை சம்பளப் பட்டியலில் இணைத்து, அதன் மூலம் அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதாகப் போலியாக காண்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சம்பளம் வழங்கப்படுவதைப் போன்று, அதற்கேற்றவாறாக போலியான ஆவணங்கள் அசலாகத் தயாரித்து, அதன் மூலமே இந்த நிதி மோசடி நடைபெற்றுள்ளது.

மேலும் தற்போது கடமையில் இருக்கின்ற மற்றும் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கும்போது தனது மனைவி, பிற நபர்களின் பெயர்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட வங்கி கணக்குகளின் ஊடாக பணம் வரவு வைக்கப்பட்டுள்ளது.

மிகவும் நுணுக்கமான முறையில் இந்த நிதி மோசடியை குறித்த நபர் மேற்கொண்டுள்ளதாக விசாரணைகளை முன்னெடுத்து வரும் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக, குறித்த மோசடியில் ஈடுபட்ட அரசாங்க உத்தியோகத்தரான நபரிடமிருந்து, இதுவரை மதிப்பிடப்பட்ட நட்டத்தை மீளப்பெற்றுக் கொள்வதற்கு அனுமதி வழங்குமாறு மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், குறித்த அரச ஊழியர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதோடு, விசாரணை முடியும் வரையில் அவருக்கான எவ்விதமான கொடுப்பனவுகளும் வழங்கப்பட மாட்டாது என்றும் மத்திய மாகாண கல்விப்பணிப்பாளர் அமரசிரி பியதாஸ தெரிவித்துள்ளார்.

கட்டணங்களைக் காட்சிப்படுத்தாமையால்

# எவ்வளவு கொடுப்பது?

■ என்.ஆராச்சி

கேகாலையை அண்மித்த பகுதிகளில் சேவைகளில் ஈடுபடும் தனியார் பஸ்களில் புதிய பஸ் திருத்தக் கட்டணங்கள் காட்சிப்படுத்தாமையால் பயணிகள் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துள்ளனர்.

இதனால் பஸ் நடத்துநர்களுக்கும் பயணிகளுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பஸ் திருத்த கட்டணங்கள் தொடர்பில் உரிய முறையில் அறிவிப்பு இன்மையால் சில நடத்துநர்கள் கூறும் கட்டணத்தையே பயணிகள் செலுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் குறித்த பகுதியில் சேவையில் ஈடுபடும் பெரும்பாலான தனியார் பஸ்களில் பயண டிக்கட்டுகள் வழங்கப்படுவதில்லை என்றும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

# நெடுஞ்சாலையின் நுழைவில் 'சந்தி சிரித்த' சட்டமும் ஒழுங்கும்

ஒவ்வொரு பெருநாளுக்கும் இரண்டொரு வாரங்களுக்கு முன்னர், வாகனம் செலுத்தும் சாரதிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், பிரதான வீதிகளின் நடுவில், சுற்றுவட்டம் இல்லையேல் பஸ் நிறுத்துமிடங்களுக்கு அண்மித்து, 'மதுபோதையில் வாகனங்களை செலுத்தாதீர்கள்' என்ற வாசகம் அடங்கிய பதாகை காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

நீண்ட விடுமுறை, கொண்டாட்டங்கள் ஆகியவற்றின் நிமித்தம், வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் அல்லது சொந்த வாகனங்களில், விடுமுறையைக் கழிப்பதற்காக வெளியூர் செல்லும்போது, மதுபோதையால் அனாவசியமான விபத்துகள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையிலேயே, இவ்வாறான விழிப்புணர்வு பதாகைகள், மக்களின் பார்வையில் இலகுவில் படக்கூடியவாறு காட்சிப்படுத்தப்படுகின்றன.

பிரதான நகரங்களில் இவ்வாறான விழிப்புணர்வு பதாகையை எந்நேரத்திலும் காணக்கூடியதாக இருக்கிறது. அவற்றுக்கு, ஏதாவது இரண்டொரு தனியார் நிறுவனங்கள் உதவி ஒத்தாசைகளை நல்கியிருக்கும். சிலவற்றுக்கு பொலிஸ் தலைமையகமும் இல்லையேல், அந்தந்த பகுதிகளுக்குப் பொறுப்பான பொலிஸ் நிலையங்களும் உரிமை கோரியிருக்கும்.

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்து, அச்சொட்டாகக் கடைப்பிடித்து, பாதுகாக்க வேண்டிய தார்மிகப் பொறுப்பு, பொலிஸாரையே சாரும். அவ்வாறு முடியாமல் போகும் சந்தர்ப்பங்களிலேயே ஏனைய படையினர் களத்தில் இறக்கப்படுவர். அந்தப்படையினரும் சட்டம், ஒழுங்கின் கீழ் செயற்படுவதற்கு கடமைப்பட்டவர்களாக இருந்தாலும், சிற்சில இடங்களில் மீறிவிடுகின்றனர். இதனால், உயிர்கள் பல காவு கொள்ளப்பட்டுள்ளன. அதற்குப் பல உதாரணங்கள் உள்ளன.

ஆனால், சட்டத்தையும் ஒழுங்கையும் மதிக்க வேண்டிய பொலிஸ் சாரதியொருவர், மதுபோதையில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்குள் வாகனத்தைச் செலுத்திச்செல்ல, அங்கிருந்த பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டமை, பொலிஸ் பொறுப்பதிகாரியின் தொலைபேசி பணிப்பின் பேரில், அங்கிருந்து பயணித்த காணொளி வைரலாகி வருகின்றது.

வாகனத்தை செலுத்தி வந்தவர், பொலிஸ் சாரதியாகவோ அல்லது பொலிஸில் கடமையாற்றும் ஏதோவொரு தரநிலையில் இருந்தவராகவோ இருக்கலாம். ஆனால், பயணிப்பதற்கு அனுமதியளிக்குமாறு அலைபேசியில் பணித்த குரல், பொலிஸ் பொறுப்பதிகாரியினுடையது என்பதை அங்கு கடமையில் இருந்தவர், எவ்வாறு அறிந்துகொண்டார்? சாதாரண ஒருவர்கூட, பணிப்புரை விடுத்திருக்கலாம் என்பது தொடர்பிலும் கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

சட்டமும் ஒழுங்கும் முறையாகக் கடைப்பிடிக்கப்படுகிறது என்றால், அங்கு கடமையில் இருந்தவரை முதலில் விசாரணைக்கு உட்படுத்தி, சி.சி.ரி.வி கமெராக்களில் பதிவான காட்சிகளை அடிப்படையாக வைத்து, வாகனத்தைக் கைப்பற்றி, சாரதியைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி, சட்டத்தின் பிரகாரம் தண்டனை வழங்கி, ஒழுங்கின் மாண்பைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் பொலிஸ் திணைக்களத்தின் கீழிருக்கும் பிரிவுகளில் கடமையாற்றுவோர், ஒவ்வொரு நிமிடமும் கண்ணும் கருத்துமாய் இருக்கவேண்டும். அதுதொடர்பில், உயர் பதவிநிலைகளில் இருப்பவர்கள் கற்றுக்கொடுக்க வேண்டும். இல்லையேல், 'ஒரே நாடு- ஒரே சட்டம்' கூட கேள்விக்குறியாகிவிடும் என்பதை நினைவில் கொள்க!




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## வாழ்வியல் தரிசனம்

மிகப் பழைமையான நீட்சி கொண்டது உலகம். காலத்தின் வயது எவ்வளவு என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. பல ஆயிரம் கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டது.

எனவே, இந்த உலகில் மனிதரின் வாழ்க்கைப் பயணம் மிகவும் குறுகியது. ஒருவர் நூறாண்டு வாழ்ந்தாலும் காலக்கணக்கில் ஒப்பிட முடியாது. இதற்குள் தான் மானுட நாடகம்.

இந்தக் குறுகிய உலக வாழ்வில்த்தான், நாங்கள் கடமைகளை நல்லபடி ஆற்ற வேண்டியுள்ளது. ஒரு நொடிகூட அவப்பொழுதாகக் கழிக்கக் கூடாது. மதிப்பு மிகு காலத்தில், சாதனைகளைப் புரிந்து, வையகத்தை உயர்ந்த நிலையில் வைத்திருத்தல் வேண்டும். வாழப் பிறந்த மனிதன் குறுகிய காலத்திலும் சரித்திரம் படைக்கலாம்.

வாழும் நாட்டில் மக்கள் அனைவரும் பேதமற இணைந்து வாழ்வதும் இல்லை; மரணம் பற்றி உணர்வதும் இல்லை. எதிர்காலத்தில் வளர்ச்சி, அடுத்த தலைமுறைகளைப் பற்றி உணராமல், ஆணவ மிடுக்குடன் வாழ்வது முறையா?

'எல்லாமே நிரந்தரம்; தங்களை அசைக்க முடியாது' என எண்ணுபவர்கள் சின்னத் துன்பத்தில் உடைந்துபோய்விடுவார்கள். அது விலக மீண்டும் கர்ஜனை! எப்போது உலகம் உண்மையை உணரப்போகின்றது?

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

குரங்கு பிடிக்க முயன்ற டெலோ;

# திட்டத்தை மாற்றிய தமிழரசு

புருஜோத்தமன் தங்கமயில்



தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (டெலோ) ஆரம்பித்த தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்கள் இணைந்து, இந்தியப் பிரதமருக்கு கோரிக்கைக் கடிதம் எழுதும் முயற்சி, தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கின்றது.

கடந்த வருடத்தின் இறுதி மாதங்களில், யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த இந்தப் பயணம், அடுத்த வாரமளவில் கோரிக்கைக் கடிதத்தை இரா.சம்பந்தன் தலைமையில் தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள், இந்திய உயர்ஸ்தானிகரிடம் கையளிப்பதோடு முடிவுக்கு வரும்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்கான அழுத்தத்தை இலங்கைக்கு இந்தியா வழங்கக் கோரும் கடிதத்தைத் தயாரிக்கும் முயற்சியையே, தமிழ் பேசும் கட்சிகளை இணைத்துக் கொண்டு, டெலோ முன்னெடுக்க நினைத்தது.

அந்தச் சந்திப்புக்கு ரவூப் ஹக்கீமையும் மனோ கணேசனையும் அழைத்துவர முடிந்த டெலோவால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் இன்னொரு பங்காளிக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜாவை அழைத்துவர முடியவில்லை.

இது ஆரம்பத்திலேயே, அந்த முயற்சிக்கான பெரும் பின்னடைவாகப் பார்க்கப்பட்டது. அத்தோடு, 13ஆவது திருத்தத்தை தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வாக இறுதி செய்யும் வேலையை, டெலோ முன்னெடுப்பதாக விமர்சனமும் எழுந்தது.

இந்த இரு விடயங்களையும் கையாள வேண்டுமாயின் கூட்டமைப்பின் தலைமையையும் தமிழரசுக் கட்சியின் தலைமையையும் எப்படியாவது தன்னுடைய முயற்சிகளின் பங்காளிகளாக மாற்றிக் கொள்ள வேண்டிய அழுத்தம் டெலோவுக்கு ஏற்பட்டது.

அதனால், முதலாவது சந்திப்பில் உரையாடப்பட்ட விடயங்களைத் தெளிவுபடுத்தி, எதிர்காலத்தில் இந்த முயற்சிகளில் பங்களிக்கக் கோரும் அழைப்பை, ஹக்கீமையும் மனோ கணேசனையும் கொண்டு சம்பந்தனிடம் விடுத்தார்கள். அது வெற்றியளிக்கவும் செய்தது. ஆனால், கொழும்பில் நடைபெற்ற இரண்டாவது சந்திப்பிலும் தமிழரசுக் கட்சியின் தலைவரோ அவரது பிரதிநிதியோ கலந்து கொண்டிருக்கவில்லை.

இந்தியப் பிரதமருக்கு தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்கள் எழுதும் கோரிக்கைக் கடிதத்தில், தமிழ் மக்களின் பிரதான கட்சியின் தலைவர் கையெழுத்திடவில்லை என்றால், அந்தக் கடிதம் இயல்பாகவே வலுவிழக்கும் என்பது வெளிப்படையானது. அதனால், தமிழரசுக் கட்சியைத் தவிர்த்துவிட்டு கடிதமொன்றை அனுப்ப முயற்சிப்பதை இந்தியா கூட விரும்பாது. அது, டெலோவுக்கும் தெரியும்.

அதனால்தான், தமிழரசுக் கட்சியின் தலைவர்களுடனான தன்முனைப்பு (ஈகோ) மோதல்களை எல்லாம் விடுத்து, டெலோ முழுவதுமாக இறங்கிச் சென்றது எனலாம்.

டெலோவின் அண்மைக்கால நடவடிக்கைகள் தொடர்பில், தமிழரசுக் கட்சி அதிருப்தி கொண்டிருக்கின்றது. கூட்டமைப்பின் ஏகபோகம் என்பது, தன்னிடம் மாத்திரமே இருக்க வேண்டும் என்பது, தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு. ஆனால், கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின்னரான நாள்களில், கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சி செலுத்தி வரும் ஏகபோக நிலையை கேள்விக்குள்ளாக்கும் வேலைகளை டெலோ ஆரம்பித்திருக்கின்றது.

குறிப்பாக, கூட்டமைப்பில் தற்போதுள்ள பங்காளிக் கட்சிகளில் டெலோ மாத்திரமே ஸ்தாபக் கட்சி என்கிற உரையாடலை, செல்வம் அடைக்கலநாதனும் குருசாமி சுரேந்திரனும் ஊடகங்களிடம் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்தனர். சம்பந்தனின் காலத்துக்குப் பின்னராக கூட்டமைப்பின் தலைமைத்துவத்தைக் கோரும் முயற்சியாக அது பார்க்கப்பட்டது.

அத்தோடு, கூட்டமைப்பைப் பதிவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கின்றது. அதன் மூலம் சம்பந்தனின் காலத்துக்குப் பின்னரான கூட்டமைப்பில், கூட்டுத் தலைமை என்கிற விடயம் பேணப்பட வேண்டும் என்று டெலோ பேச ஆரம்பித்தது. அதன் போக்கிலும்தான், தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை இணைத்துக் கொண்டு, இந்தியாவுக்கு கோரிக்கைக் கடிதத்தை தயாரிக்கும் வேலைகளை டெலோ முன்னெடுத்தது. வழக்கமாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தயாரிக்கப்படும் கோரிக்கைக் கடிதங்கள், அறிக்கைகள், தீர்மானங்கள் என்று அனைத்து விடயங்களும் கூட்டமைப்பின் தலைமையாலேயே முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றது.

கூட்டமைப்பின் தலைமை என்பது, கடந்த ஒரு தசாப்த காலத்தில் சம்பந்தனும் எம்.ஏ.சுமந்திரனும் என்கிற நிலைக்குள் சென்றுவிட்டது. அதற்கு மேலதிகமாக, தமிழரசுக் கட்சி மாத்திரமே கூட்டமைப்புக்குள் தாக்கம் செலுத்தியது. இவர்களின் தீர்மானங்களை அங்கிகரிப்பதுதான் பங்காளிக் கட்சித் தலைவர்களின் வேலை என்றாகிவிட்டது.

இந்த நிலையிலிருந்து வெளியேறி, தங்களை ஆளுமைமிக்க தலைமையாக முன்னிறுத்தும் அவசியம் டெலோவுக்கு ஏற்பட்டிருக்கின்றது. அது ஒரு கட்சியாகவோ, கட்சித் தலைமையாகவோ தவறில்லை. அதுவும், கடந்த பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்குப் பிறகு அதிக ஆசனங்களை வெற்றி கொண்ட தமிழ்த் தேசிய கட்சியாக டெலோவுக்கு வராமல் இருந்தால்தான் வியப்பாக இருக்கும்.

ஆனால், தமிழ்த் தேசிய பரப்பில் முதன்மைக் கட்சியாக அல்லது தீர்மானிக்கும் கட்சியாகத் தன்னை தயார்படுத்துவதற்கு தேர்ந்தெடுத்த வழிமுறைதான் டெலோவை, கூட்டமைப்பின் அனைத்து ஆணைகளுக்கும் தலையாட்டும் கட்சிதான் என்ற கட்டத்தில் மீண்டும் கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தையோ மாகாண சபையையோ, தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வாக எந்தவொரு தமிழ்த் தேசிய கட்சியும் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தியாவின் ஏவல் தரப்பாக இயங்கிய ஈ.பி.ஆர்.எல்.எப்பும் கூட, மாகாண சபை முறைமை தமிழ் மக்களுக்கு தீர்வில்லை என்று அறிவித்திருக்கின்றது. இணைந்த வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த வரதராஜப்பெருமாள், முதலமைச்சர் பதவியை துறந்து இந்தியாவுக்கு குடிபெயர்ந்த போதே, அதனை வெளிப்படையாக அறிவித்துவிட்டே சென்றார்.

அப்படியான நிலையில், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்துமாறு வலியுறுத்தும் கோரிக்கையை பிரதான விடயமாக்கியதுதான், டெலோவின் முயற்சிகளின் தோல்விக்கு காரணமாகும். அது, இந்த முயற்சியின் பின்னணி தொடர்பில் இன்னமும் சந்தேகம் எழுப்பப்படுவதற்கும் ஏதுகையாக அமைந்தது.

டெலோவின் சந்திப்புகளில் சம்பந்தன் பங்கெடுத்த போதே அது, டெலோவின் பிடியிலிருந்து விடுபட ஆரம்பித்தது. மூன்றாவது சந்திப்பில் தமிழரசுக் கட்சி கலந்து கொண்ட போது, அந்தக் கட்சி முழுமையான ஆவணமொன்றைக் கொண்டு வந்தது. அதற்கும் டெலோ தயாரித்த ஆவணத்துக்கும் பாரிய இடைவெளி காணப்பட்டது.

வடக்கு கிழக்கிற்கு வெளியில் இருக்கும் தமிழ்க் கட்சிகளுக்காகவும் முஸ்லிம் கட்சிகளுக்காகவும் சமஷ்டி, சுயநிர்ணயம் உள்ளிட்ட வார்த்தைகளைத் தவிர்த்து, தமிழரசுக் கட்சி கோரிக்கை ஆவணத்தை தயாரிக்க இணங்கிய போதும், 13ஆவது திருத்தத்தை பிரதானப்படுத்தும் கடிதமாக அது அமையவில்லை. அதனால், மனோ கணேசன், ஹக்கீம் உள்ளிட்டவர்கள் அந்தக் கடிதத்தில் இருந்து தங்கள் கட்சிகள், உறுப்பினர்களின் அழுத்தத்தால் பின்வாங்கினர்.

அப்படியான நிலையில், டெலோவின் முயற்சி இறுதியாக தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள் கோரிக்கைக் கடிதத்தில் கையெழுத்திடும் நிலைக்குள் சுருங்கியது. மாவை சேனாதிராஜா தவிர்ந்த அனைத்துக் கட்சித் தலைவர்களும் கையெழுத்தும் இட்டார்கள்.

கடந்த செவ்வாய்க்கிழமை கடிதம் இந்திய உயர்ஸ்தானிகரிடம் கையளிக்கப்படவிருந்தது. ஆனால், அதற்கு முன்னால், கடிதத்தின் பிரதி டெலோவால் வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கு அனுப்பப்பட்டது. இது, மீண்டும் சிக்கலைத் தோற்றுவித்தது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் ஒப்பமிடுவதற்கு முன்னர், கடிதம் எப்படி வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கு அனுப்பப்பட்டது? அதுவும், யாருக்கு கோரிக்கை விடுக்கப்படுகின்றதோ, அந்தத் தரப்பிடம் கையளிக்கப்படாத கடிதத்தை எப்படி, ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும் என்று தமிழரசுக் கட்சி விடயத்தை பெரிதாக்கியது.

இப்படியான இறுதி நேரச் சிக்கல்களை அடுத்து, தமிழரசுக் கட்சி மீண்டும் தன்னை முதன்நிலையில் காட்சிப்படுத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தியது. மனோ கணேசனும், ஹக்கீமும் கடிதத்தில் கையெழுத்திட மாட்டார்கள் என்கிற நிலையில், கோரிக்கைக் கடிதத்தில் சமஷ்டி, சுயநிர்ணயம் என்கிற விடயங்களை சேர்போம் என்று தமிழரசுக் கட்சி வலியுறுத்தியது.

தற்போது அந்த விடயங்களுக்கு ஏனைய கட்சிகளும் இணங்கி, புதிய கடிதத்தில் கையெழுத்திட இருக்கிறார்கள். எதிர்வரும் 18ஆம் திகதிக்கு பின்னர், குறித்த கடிதம் இந்திய உயர்ஸ்தானிகரிடம் கையெளிக்கப்படலாம். டெலோ ஆரம்பித்த விடயம், இறுதியாக தமிழரசுக் கட்சி, சம்பந்தனின் தீர்மானங்களோடு முடிவுக்கு வந்திருக்கின்றது.

விடயம் பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காக மாறாமல், 13ஆவது திருத்தம் என்ற குரங்கைப் பிடிக்க கிளம்பியவர்களிடம் இருந்து ஒருவாறாக மீட்கப்பட்டு பிள்ளையாருக்கு அண்மித்த ஒரு வடிவம் பிடிக்கப்பட்டிருக்கின்றது. அந்தளவில் தமிழ் மக்கள் ஓரளவுக்கு நிம்மதி கொள்ளலாம்.

## கடிதங்கள்

### விவசாய காணிகளற்ற குடும்பங்களுக்கு காணிகளை வழங்கவும்

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதியில் விவசாய காணிகள் இன்றி வாழும் 75 வரையான குடும்பங்களுக்கு, காணிகளை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் பகுதியில் காணிகள் அற்ற குடும்பங்களுக்கு, குடியிருப்புக் காணிகள் வழங்கப்பட்டு, குடியமர்த்தப்பட்டு உள்ளபோதும் இந்தக் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்குரிய வயற்காணிகள், இதுவரை வழங்கப்படவில்லை. எனவே, தமக்கான வயற்காணிகளை பெற்றுத்தருமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

அதாவது, தமது பகுதிக்கு அண்மையாக உள்ள காஞ்சுரங்குளத்தைப் புனரமைத்து, அதன் கீழ் உள்ள வயற்காணிகளை வழங்குமாறு தெரிவிக்கின்றனர்.

குறித்த காணிகளைத் தங்களுக்கு வழங்குமாறு தொடர்ச்சியாகக் கோரி வருகின்றபோதும், இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் தமது வாழ்வாதாரமான விவசாயத்தை மேற்கொள்ள முடியாதுள்ளதாகத் தெரிவித்துள்ளனர் .

மேற்படி குடும்பங்கள் விவசாயத்தை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளதால் அதனை முன்னெடுப்பதற்கான சொந்தக்காணிகள் எதுவுமின்றி, தாங்கள் தொடர்ந்தும் கஸ்டங்களை எதிர்கொள்வதாகவும் சுட்டிக்காட்டி உள்ளதுடன் தமக்கான வயல் காணிகளை பெற்றுத்தருமாறு கோரியுள்ளனர்.

-யது பாஸ்கரன்

தமிழகம்:

# இலங்கை தமிழர்களுக்கு பொங்கல் பரிசு

குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் கடைகளில், அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. இதற்கான உத்தரவை தமிழக அரசு பிறப்பித்திருந்தது.

தைப்பொங்கல் பண்டிகையை பொதுமக்கள் வெகுவிமரிசையாகக் கொண்டாடும் நோக்கில், ரேஷன் கடைகள் மூலம் 21 பொருட்கள் இலவசமாக வழங்கப்படும் என, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.



அதன்படி, சுமார் 2.15 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு மையங்களில் வசிப்போர் ஆகியோருக்கு 21 பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

பொங்கல் சிறப்பு பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டு வருவதால், ரேஷன் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதுவரையில், பொங்கல் சிறப்பு பரிசு 65 சதவீதமானோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

சென்னை:



## மதுபான விடுமுறை வழக்கு தள்ளுபடி

தமிழக அரசு அறிவித்துள்ள பொது விடுமுறை நாள்களில் மதுபானக் கடைகளுக்கும் விடுமுறை அளித்து மது விற்பனை இல்லா நாள்களாக அறிவிக்கக் கோரிய மனு வாபஸ் பெறப்பட்டதைத் தொடர்ந்து, வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தில், தூத்துக்குடியைச் சேர்ந்த வழக்கறிஞர் ராம்குமார் ஆதித்தன் தாக்கல் செய்த மனுவில், ஒவ்வோர் ஆண்டும் தமிழக அரசின் விடுமுறை நாள்கள் குறித்து, தலைமைச் செயலாளர் விடுமுறை நாள்கள் குறித்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ளார்.

அதிலுள்ள, பொது விடுமுறை நாள்களாக புத்தாண்டு, பொங்கல், மாட்டுப் பொங்கல், தைப்பூசம், குடியரசு தினம், மொகரம், பக்ரீத், ரமழான், புனித வெள்ளி, நத்தார், தீபாவளி, சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை, சுதந்திர தினம், காந்தி ஜெயந்தி, மே தினம், தெலுங்கு வருடப் பிறப்பு, தமிழ் வருடப் பிறப்பு ஆகிய தினங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

எனவே, தமிழக அரசு அறிவித்துள்ள பொது விடுமுறை நாள்களில் டாஸ்மாக் மதுபான கடைகளுக்கும் விடுமுறை அளித்து, மது விற்பனை இல்லா ந ள்களாக அறிவிக்க வேண்டுமென கோரிக்கை வைத்துள்ளார்.

மனுவை விசாரித்த நீதிபதிகள், மதுபான விற்பனையகங்கள், கடைகள், வணிக நிறுவனங்கள் சட்டப்படிதான் வரும் என்றும், அரசு பொது விடுமுறை நாள்களில் கட்டுப்படாது என்றும் தெரிவித்து வழக்கை தள்ளுபடி செய்தனர்.

சென்னை:

## கரும்புக்கான விலையை அதிகரி

கரும்புக்கான ஆதார விலையை தொன் ஒன்றுக்கு ரூ.4,000 ஆக உயர்த்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென சட்ட மன்ற எதிர்க்கட்சி துணைத்தலைவர் ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து,அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

'தமிழ்நாடு சட்டமன்ற பேரவை பொதுத் தேர்தலை முன்னிட்டு, திராவிட முன்னேற்ற கழகம் (தி.மு.க) வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், கரும்புக்கு ஆதார விலை தொன் ஒன்றுக்கு 4,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்' என்று தலைப்புச் செய்தியாக கொடுக்கப்பட்டது. ஆனால், மூன்று நாள்களுக்கு முன்பு தி.மு.க அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தி வெளியீட்டில், கரும்புக்கு தொன்னுக்கு 2,900 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளமையானது கரும்பு விவசாயிகளை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

கரும்புக்கான நியாயவிலையை மத்திய அரசு நிர்ணயித்து வருகிறது. இந்த வகையில், நான் முதலமைச்சராக இருந்த காலகட்டமான 2016-2017ஆம் ஆண்டு கரும்பு பருவத்திற்கு நியாயமான மற்றும் ஆதாய விலையாக தொன் ஒன்றுக்கு 2,300 ரூபாய் என மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்பட்டது.

அதேசமயத்தில் அண்டை மாநிலமான கர்நாடகத்தில் பெரும்பாலான சர்க்கரை ஆலைகள் தொன் ஒன்றுக்கு 2,600 ரூபாய் வழங்கியதையும், மகாராஷ்டிராவில் 2,475 ரூபாய் வழங்கியதையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டிலுள்ள கரும்பு விவசாயிகளின் நலனைக் காக்கும் வகையில், மத்திய அரசின் நியாயமான மற்றும் ஆதாய விலையான கரும்புக்கு தொன் ஒன்றுக்கு 2,300 ரூபாய் என்ற விலையுடன் மாநில அரசின் பரிந்துரை விலையாக போக்குவரத்துச் செலவு 100 ரூபாய் உட்பட 550 ரூபாய் சேர்க்கப்பட்டு, ஒரு தொன் கரும்பின் விலை 2,850 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டது என்றும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

காஞ்சிபுரம்:

## பக்தர்களுக்கு அனுமதி இல்லை

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் இன்று (13) காலை 4 மணி முதல் 8 மணி வரை பக்தர்களுக்கு அனுமதி இல்லை என தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆண்டாள் கோவிலில் இன்று காலை 7.35 மணிக்கு சொர்க்கவாசல்



திறக்கப்படுவதை ஒட்டி கோவில் நிர்வாகம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

சூஷல்:



## 14ஆம் கட்ட பேச்சு ஆரம்பம்

எல்லை பிரச்சினை தொடர்பாக இந்தியா - சீனா இடையே 14 ஆம் கட்ட பேச்சுவார்த்தை தொடங்கியுள்ளது. லடாக்கின் சூஷல் - மோல்டோ எல்லை பகுதியில் இரு நாட்டு இராணுவ உயர் அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர்.

சென்னை:



## இணையவழி வகுப்பே சிறந்தது

10,11,12ஆம் வகுப்புகளுக்கு இணையவழி வகுப்பே சிறந்தது என சென்னை உயர்நீதிமன்றம் அரசுக்கு அறிவுரை வழங்கியுள்ளது. கொரோனா 3 ஆவது அலை அதிகரித்து வரும் நிலையில், மாணவர்களுக்கு நேரடி வகுப்பு நடத்துவதை தவிருங்கள் என்றும் நீதிபதிகள் கூறியுள்ளனர். இணையவழி வகுப்புகளால் ஆசிரியர், மாணவர், பணியாளர் ஆகியோரின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்றும் நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

வில்லியனூர்:



## ஆபாசப் படமெடுத்து மாணவிக்கு மிரட்டல்

புதுவை மாநிலம் வில்லியனூர் பகுதியை சேர்ந்த 17 வயது மாணவி பிளஸ்-2 படித்து வருகிறார். இவர் ஆன்லைன் வழியில் படிப்பதற்காக வீட்டில் வாங்கி கொடுத்த செல்போனில் பேஸ்புக், வாட்ஸ்-அப் மூலம் முகம் தெரியாத நபர்களிடம் பேசி வந்ததாக கூறப்படுகிறது.

அப்போது நாகை மாவட்டம் சிக்கல் பகுதியை சேர்ந்த வாலிபருடன் மாணவிக்கு பழக்கம் ஏற்பட்டது. இருவரும் வீடியோவில் அடிக்கடி பேசி வந்தனர். அப்போது வீடியோவில் ஆபாசமாகக் காட்டச் சொல்லி, அதை வீடியோவாக வாலிபர் பதிவு செய்தார்.

அந்த ஆபாச வீடியோவை தனது நண்பர்களுக்கும் அந்த வாலிபர் அனுப்பினார். அந்த நண்பர்களும் மாணவியைத் தொடர்பு கொண்டு ஊட்டிக்கு வருமாறு அழைத்துள்ளார்கள்.

அவர்களது மிரட்டலுக்கு பயந்த மாணவி, ஊட்டிக்குப் புறப்பட்டுச் செல்ல தயாரானார். இதையறிந்த பெற்றோர், மகளிடம் விசாரித்தபோது, நடந்த விவரத்தைக் கூறி கதறி அழுதார்.

மாணவியின் பெற்றோர் பொலிஸில் புகார் அளித்தனர். அதன்பின்னர், ஒருவரைக் கைது செய்த பொலிஸார், மற்றுமோர் இளைஞனை தேடிவருகின்றனர்.






## பொங்கல் பானை

கிளிநொச்சியில் அமைந்துள்ள சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் 40 குடும்பங்களுக்கு பொங்கல் பானையும் பொங்கல் பொருட்களும் நேற்று (12) வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளடங்கலாக 40 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கான பொங்கல் பானையும் பொங்கலுக்கான பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வு, சின்மயா மிஷன் மண்டபத்தில் நடைபெற்றுள்ளது. இதில், சின்மயா மிஷன் சிவேந்திர சயித்தன்யா சுவாமிகள், மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டு, பொருட்களை பயனாளிகளிடம் வழங்கிவைத்தனர்.

(படங்கள்: சுப்ரமணியம் பாஸ்கரன்)





## புத்தரிசி

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, அம்பாறை மாவட்டத்தில் வசதி குறைந்த ஒரு தொகுதி மக்களுக்கு, பொங்கல் பொங்குவதற்கான புத்தரிசி தொடக்கம் சட்டி, பானை உள்ளிட்ட பொருட்கள், காரைதீவு பிரதேச சபைத் தவிசாளரும் சமூக சேவையாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறினால் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன. (படங்கள்: சகா)











## உபகரணங்கள் வழங்கிவைப்பு

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 பாடசாலைகளைச் சேர்ந்த 100 மாணவர்களுக்கு இராணுவத்தினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வில், முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமையகம், 66 ஆவது படைப்பிரிவின் அதிகாரிகள், படையினர் கலந்துகொண்டு சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைய உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

(படங்கள்: சுப்ரமணியம் பாஸ்கரன்)









## நூல்கள் வழங்கி வைப்பு

நுவரெலியா மாவட்ட அறிநெறி பாடசாலைகளுக்கான நூல்கள் வழங்கும் நிகழ்வும் அறநெறி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் கொட்டகலை வூட்டன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை இந்து கலாசார திணைக்களம் மேற்கொண்டிருந்தது.

இதன்போது நுவரெலியா மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 190 அறநெறி பாடசாலைகளில் 75 பாடசாலைகளுக்கான நூல்கள் வழங்கி வைக்கப்பட்டன. தற்பொழுது நுவரெலியா மாவட்டத்தில் 75 அறநெறி பாடசாலைகள் மாத்திரமே இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஏனையவை செயலிழந்துள்ளன.

(படங்கள்: டி. ஷங்கீதன்)

கம்போடியா

மகாவா மறைந்தது:

# சோகத்தில் கம்போடியா

தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றான கம்போடியாவில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 'மகாவா " என அழைக்கப்படும் எலியானது உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த மகாவா தனது 8 ஆவது வயதில் நேற்றைய தினம் இறந்துள்ளது.

அபார மோப்ப சக்தி கொண்ட இவ் எலியானது இதுவரை சுமார் 100 கண்ணிவெடிகளைக் கண்டுபிடித்துக் கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேலும் இதன் மிகச் சிறப்பான பணியை அங்கீகரிக்கும் விதமாக பிரித்தானியாவின் விலங்குகள் நல அமைப்பு, மகாவாவுக்கு தங்கப்பதக்கம் வழங்கி கௌரவப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் எலிகளுக்கு கண்ணிவெடிகளை கண்டுபிடிக்கும் பயிற்சியை அளித்துவரும் அபோபா என்ற தொண்டு நிறுவனம் மகாவா மறைவு குறித்து, வெளியிட்டுள்ள இரங்கல் குறிப்பில், அபோபாவில் அனைவருமே மகாவா இழப்பால் வாடுகிறோம்.

அதன் சேவைக்கு நன்றியைத் தெரிவிக்கிறோம். மகாவா வியத்தகு பணியை செய்து சென்றுள்ளது. மகாவாவின் வியக்கவைக்கும் மோப்ப சக்தி கம்போடிய மக்கள் நிம்மதியாக, கை, கால் இழக்கும் அச்சமின்றி வேலை செய்ய, விளையாட வழிவகை செய்துள்ளது என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

மனித உடலில்

## பன்றியின் இதயம் துடித்தது



அமெரிக்காவில் முதியவர் ஒருவருக்குப் பன்றியின் இதயம் பொருத்தப்பட்ட சம்பவம் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

57 வயதான டேவிட் பென்னட் என்பவருக்கே இவ்வாறு இதய மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த முதியவர் மாற்று இதயம் கிடைக்காமல் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த வேளையிலேயே அமெரிக்காவின் மருத்துவ கட்டுப்பாட்டு அமைப்பினர் அவருக்கு இச்சிறப்பு இதய மாற்று அறுவை சிகிச்சை செய்ய அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவையில் குறித்த முதியவருக்கு மரபணு மாற்றம் செய்யப்பட்ட பன்றியின் இதயத்தை மருத்துவர்கள் வெற்றிகரமாக பொருத்தியுள்ளதாகவும், அவர் தற்போது நலமாக உள்ளார் எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.



வடகொரியா

## மீண்டும் மீண்டுமா...?

### அதிர்ச்சியில் உலகநாடுகள்

கடந்த வருட இறுதியில் வடகொரியாவில் கடும் உணவு பஞ்சம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அந்நாட்டின் ஜனாதிபதி கிம் ஜாங் உன், தன்னுடைய புத்தாண்டு உரையில் 'இன்றைய பொருளாதார சூழலில் பொதுமக்களுக்கு உணவு தான் முக்கியமே தவிர அணு ஆயுதங்கள் அல்ல' என்று தெரிவித்திருந்தார்.



எனினும் 2022-ஆம் ஆண்டு பிறந்ததில் இருந்து வடகொரியா இரு ஏவுகணை சோதனைகளை நடத்தியுள்ளதாக ஜப்பான் மற்றும் தென் கொரிய தெரிவித்துள்ளமை உலக நாடுகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இந்த ஏவுகணை சோதனைக்கு தென் கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளதோடு அமெரிக்கா, பிரான்ஸ், அயர்லாந்து, பிரித்தானியா மற்றும் அல்பேனியா உள்ளிட்ட நாடுகள் ஏவுகணை சோதனையைத் தவிர்க்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

ஒமைக்ரோனுக்கு

## புதிய தடுப்பூசி

ஒமைக்ரோன் வைரஸ் தொற்றுக்கு எதிராக புதிய தடுப்பூசியைத் தயாரித்து வருவதாகவும்,வரும் மார்ச் மாதம் அதன் பணி நிறைவடையும் எனவும் அமெரிக்காவின் ஃபைசர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து பைசர் நிறுவனத்தின் தலைமைச் செயற்பாட்டு அதிகாரி ஆல்பர்ட் போர்லா,கருத்துத் தெரிவிக்கையில் "புதிதாகக் தயாரிக்கப்படும் தடுப்பூசி செயலாற்றும் வேகம், திறன் ஆகியவை குறித்த தகவல்கள் இனிமேல் தான் தெரியவரும்" என்றார்.

அத்துடன் "தற்போது பயன்பாட்டில் இருக்கும் தடுப்பூசிகளே ஒமைக்ரோனுக்கு எதிராக நியாயமான பாதுகாப்பை கொடுத்தாலும், ஏற்கனவே தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்கு தொற்றுப் பாதிப்பு ஏற்படுவதை தடுக்க, பிரத்யேகத் தடுப்பூசி தயாராகி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, ஒமைக்ரோனுக்கு மட்டுமில்லாமல் புதிதாக உருமாறும் வைரஸ்களுக்கு எதிராகத் தடுப்பூசியை தயாரித்து வருவதாக மொடர்னா நிறுவனமும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## அமெரிக்காவில் முதல்முறை



அமெரிக்க வரலாற்றில் முதல்முறையாக கறுப்பினப் பெண் ஒருவரின் உருவம் பொறித்த நாணயம் வெளியிடப்பட்டுள்ளது.

பிரபல எழுத்தாளரும் பெண்ணுரிமை போராளியுமான மாயா ஏஞ்சலோவின் உருவமே இவ்வாறு நாணயத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

இவர் எழுதிய சுயசரிதை புத்தகத்தில் தனக்கு சிறுவயதில் ஏற்பட்ட பாலியல் வன்கொடுமை மற்றும் அதுசார்ந்த தாக்கம் குறித்தும் விரிவாக பதிவு செய்திருந்தார்.

இதனால் குறித்த புத்தகமானது அமெரிக்காவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் கடந்த 2014ஆம் ஆண்டு, தனது 86ஆவது வயதில் அவர் காலமானார்.

இதனையடுத்து, மாயா ஏஞ்சலோ நினைவாக,அமெரிக்காவில் நாணயங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## Squid Game யில் நடித்தவருக்கு Golden Globes விருது

ஸ்குயிட் கேம் (*Squid Game*) இணையத் தொடரில் நடித்த ஓ இயோங்-சு (*O Yeong-su*), என்பவர் கோல்டன் குலோப்ஸ் (*Golden Globes*) விருது விழாவில் வரலாறு படைத்துள்ளார்.




77 வயதான இவர் *Golden Globes* விழாவில் தனிநபர் விருதுபெறும் முதல் தென்கொரியர் என்ற சிறப்பைப் பெற்றுள்ளார்.

நெட்ப்ளிக்ஸில் (*Netflix*) வெளியான இத்தொடரில் அவர் ஏற்று நடித்த முதல் போட்டியாளர் வேடத்துக்காக அவருக்கு ஆகச் சிறந்த துணை நடிகர் விருது கிடைத்தது. அத்துடன் குறித்த தொடருக்காக விருதை வென்றது அவர் மாத்திரமே என்பதும் குறிப்பிடத்தக்கது.




தென்னாபிரிக்காவுக்கெதிரான மூன்றாவது டெஸ்டில்

# 223 ஓட்டங்களுடன் சுருண்ட இந்தியா

தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டின் முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 223 ஓட்டங்களை இந்தியா பெற்றுள்ளது.




மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், கேப் டௌணில் நேற்று முன்தினம் ஆரம்பித்த இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் விராட் கோலி, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா சிறிது நேரத்தில் லோகேஷ் ராகுல், மாயங்க் அகர்வாலை டுவன்னே ஒலிவியர், ககிஸோ றபாடாவிடம் இழந்தது. பின்னர் செட்டேஸ்வர் புஜாரா, கோலி இனிங்ஸைக் கட்டியெழுப்பிய நிலையில், 43 ஓட்டங்களுடன் மார்கோ ஜன்சனிடம் புஜாரா வீழ்ந்தார். தொடர்ந்து வந்த அஜின்கியா ரஹானேயும் சிறிது நேரத்தில் றபாடாவிடம் வீழ்ந்தார்.

தொடர்ந்து வந்த ரிஷப் பண்டின் துணையில் கோலி இனிங்ஸை நகர்த்திய நிலையில் 27 ஓட்டங்களுடன் பண்ட் ஜன்சனிடம் வீழ்ந்தார். தொடர்ந்து வந்த இரவிச்சந்திரன் அஷ்வின், ஷர்துல் தாக்கூர், ஜஸ்பிரிட் பும்ரா ஆகியோர் அடுத்தடுத்து ஜன்சன், கேஷவ் மஹராஜ், றபாடாவிடம் வீழ்ந்தனர்.

இறுதியாக 79 ஓட்டங்களுடன் கோலியும் றபாடாவிடம் விழ, இறுதி விக்கெட்டாக லுங்கி என்கிடியிடம் மொஹமட் ஷமி விழ சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 223 ஓட்டங்களை இந்தியா பெற்றது.

இந்நிலையில், தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தென்னாபிரிக்கா, அணித்தலைவர் டீன் எல்கரை ஜஸ்பிரிட் பும்ராவிடம் பறிகொடுத்த நிலையில் முதல் நாள் முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 17 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில், ஏய்டன் மர்க்கரம் 8, கேஷவ் மஹராஜ் 6 ஓட்டங்களுடன் உள்ளனர்.




மாகாண மட்ட பூப்பந்தாட்டத் தொடர்:

## பதக்கம் வென்ற புத்தளம் சாஹிரா மாணவர்கள்

■ எம்.யூ.எம். சனூண்

வட மேல் மாகாண பூப்பந்து சம்மேளனத்தால் குருநாகல் மாநகர சபை உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற பூப்பந்தாட்டத் தொடரில் புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியின் மாணவர்கள் பதக்கங்களை சுவீகரித்துள்ளனர்.

இத்தொடரில், 11 வயது, 15 வயது, 19 வயது பிரிவினர்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டிகளில் சாஹிரா மாணவர்கள் இரண்டாமிடங்களைப்பெற்று வெற்றியீட்டியுள்ளனர்.

11 வயதின்கீழ் தரம் 6 எம். ஹவாசம், ஆதீப் அஹமத், 15 வயதின் கீழ் முஹம்மது அப்பத், எ.எம். நாமிக், 19 வயதின்கீழ் எம். பாசிம், எம். ஹயாசிம் ஆகியோரே வெற்றிகளை பெற்று பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டிக்கு சாஹிரா தேசிய பாடசாலையின் உதவி அதிபரும், பூப்பந்து பயிற்றுவிப்பாளரும், தேசிய நடுவருமான எம். என்.எம். ஷரீக் வீரர்களுக்கு பயிற்சிகளை வழங்கி வழிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




தேசிய ரீதியில் சம்பியனான

## கிளிநொச்சி உழவர் ஒன்றிய அணியினருக்கு மகத்தான வரவேற்பு

கபடி தேசிய சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட தேசிய ரீதியான கபடிப் போட்டியில் வரலாற்றில் முதல்த் தடைவையாக கிளிநொச்சி மாவட்ட அணி சம்பியனானது

கிளிநொச்சி மாவட்ட அணி சார்பாக உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தின் பெண்கள் அணியினர் பங்கு பற்றியிருந்தார்கள். அவர்களுக்கு நேற்று முன்தினம் மகத்தான வரவேற்பு உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தினரால் வழங்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் மாவட்ட கபடி பயிற்றுவிப்பாளர் சிவநேசன் சிவநகர் அ.த.க பாடசாலையின் முன்னாள் முதல்வர் ஐ. இராசரத்தினம், பிரதேச சபையின் உறுப்பினர் ஜீவராசா மற்றும் வீராங்கனைகளின் பெற்றோர்கள் விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கல்வியங்காடு பிறிமியர் லீக்:

## சம்பியனான கல்வியங்காடு றைனோஸ்



■ எஸ். நிதர்ஷன்

கல்வியங்காடு பிறிமியர் லீக்கின் (கே.பி.எல்) இரண்டாவது பருவகால தொடரின் வெற்றிக் கிண்ணத்தை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கோப்பாய் பிரதேச சபை உறுப்பினர் சண்முகராஜா சிறிகுமரனின் கல்வியங்காடு றைனோஸ் (கே.ஆர்) அணி தனதாக்கியுள்ளது.

ஞானபாஸ்கரோதய சங்கம் நடத்திய கல்வியங்காடு பிறிமியர் லீக்கின் (கே.பி.எல்) இறுதிப் போட்டி அண்மையில் ஜீ.பி.எஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் கல்வியங்காடு றைனோஸ் (கே.ஆர்) அணியை எதிர்த்து கல்வியங்காடு நைட் றைடஸ் (கே.கே.ஆர்) அணியும் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கல்வியங்காடு றைனோஸ் (கே.ஆர்) அணியின் தலைவர் முதலில் பந்துவீச்சை தெரிவு செய்தார். இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கல்வியங்காடு நைட் றைடர்ஸ் (கே.கே.ஆர்) அணி 10 ஓவர்களில் 72 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு, 73 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கல்வியங்காடு றைனோஸ் (கே.ஆர்) அணி 9 ஓவர்களிலேயே வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக கல்வியங்காடு றைனோஸ் (கே.ஆர்) அணி வீரர் மதுசன் தெரிவு செய்யப்பட்டார்.







விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 13 ஜனவரி 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.